தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆவணி 5 (20-8-'60). சனிக்கிழமை | இதழ் 10

அடிமைநாட்டு அவலநிலை.

வடநாட்டுக் குடியாட்சித் தலைவரின் இந்தி அரசாதிக்க உத்தரவுக்குப் பிறகு, இந்தியத் துணைக்கண்ட முழுவதும் ஏற்பட்டிருக்கிற அரசியல் நிலைமை-அதன், சாதக பாதகங்கள் ஆராயத்தக்க ஒன்ருக இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவுகின்ற பல்வேறு அரசியல் வாதிகளின் நெஞ்சாழத்தில் கிடந்த விசித்திர—விபரீத உண்மைகள் சில, இந்த நேரத்தில் வெளியாகி இருக்கின்றன.

அந்த உண்மைகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் வருங்கால-நிர்மாண வேலைகளுக்கு நினைவு கூரத்தக்கவையாகவும், சீரிய வழி காண்பதற்குப் பயனுள்ளதாகவும் இருக்கும் என்று நம்புகிருேம்.

குடியாட்சித் தலைவரின் ஆணைப்படியோ, வேறு விதமோ, 'இந்தி ஆதிக்க மொழியாக ஆக்கப்பட்டால் பொதுவாக இந்தி பேசாத மக்களும், சிறப்பாகத் திராவிட மக்களும், அதனுல் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்' என்ற உண்மை, வடதிசை ஏகாதிபத்திய வெறியர்களாலும், தென்திசைக் கையாட்களாலும், மறுக்க முடியாத அளவுக்கு, இந்த நேரத்தில் நிலை நாட்டப் பட்டு விட்டது. இது மிகமிக முக்கியம். இதை, தி.மு.க. வின் சாதனை என்ருல் அறிவாளர் மறுப்பதற்கில்லை.

இந்தியால் திராவிடம் பாதகமடையும் என்று நிறுவி இருந்தாலும் கூட, இந்தியின் எதேச்சாதிகாரத் தலையீடு 1952-முதலே, மறைமுகமாகவும் நேர் முகமாகவும் ஆங்காங்கு ஏற்பட்டிருப்பதை மறக்க முடியாது.

ஊராட்சி அலுவலர் பெயர்களிலிருந்து, நெடுஞ்சாலை அலகுக்கற்களிலும், அஞ்சல் நிலைய அமைவுத் தாள்களிலும், புகைவண்டிக் கெடிகளிலும் தேவையற்ற இந்தி 'தெங்தினம்' பாடிக் கொண்டிருக்கிறது.

இந்தி பேசாத மக்களின் 'கொளுகொம்பாக' வடவர் பிரான் நேரு ஒருவரே காணப்படுகிருர். அவர், அவ்வளவு நம்பிக்கைக்கு உகந்தவரா-நய வஞ்சக நரியா? என்பதைக் காலஅடைவே தெளிவாக்க வேண்டும்.

கடந்த கால வரலாறுகள் திராவிடத்தைப் பொறுத்த மட்டில் நேருவின் பண்புக்கும் அவருடைய சான்ருண்மைக்கும் மாறுபட்ட திசையையே காட்டுகின்றன. திராவிடத்திற்கு நேரு வருகை தந்த காலங்கள் மிகப்பல. அந்த வருகைகளில் திராவிடத்திற்கு அன்பு காட்டி மறவாத நன்றிப் பெருக்கை அள்ளிக் கொண்டு போனதாக ஒன்றுமில்லை. ஏதுமின்றி நிறைவேறிய வருகைகள் சில இருக்கலாம், ஆனுல், வசையும், இழிவும், அடியும் கொடுத்துப் போன வருகைகளே ஏராளம்.

எனவே, அவருடைய செயல்கள் ஐயப் பாட்டின் இடையில், ஆராய்ச்சியில் நிறுத்தப்படதக்க தென்று கருதுகிருேம்.

நமது ஆராய்ச்சிக்கு உறுதுணையாக இங்கு சிலவற்றைப் பரப்புவோம்.

கடந்த 7 8-59-ம் தேதியிலும் —4–9—59-ம் தேதியிலும் நடந்த இரண்டு பாராளுமன்றக் கூட்டங்களில், அவர் இந்தி ஆதிக்கம் பற்றிய வாக்குறுதிகளை மொழிந்தார்.. அவை:-

'இந்தியை ஆதிக்க மொழியாக ஏற்றுக் கொள்வதா - இல்லையா? என்று, தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு, இந்தியல்லாத பிற மொழி மக்களைச் சேர்ந்ததாகும்!

இந்தி பேசாத மக்களின் உடன்பாடில்லாமல், அரசாங்கம் இந்தியை ஆதிக்கமொழி ஆக்காது. தொடர்ந்து ஆங்கிலமே ஆதிக்க மொழியாக இருந்து வரும், இது போன்ற கருத்துப்பட மொழிந்தார் நேரு.

இந்த உறுதிமொழி, இந்திய அரசியல் சட்டத்திற்கு மீறியது என்பதை நாமும் அறிவோம்-ஆதிக்க வெறியர்களும் அறிவார்கள். நேருவுக்கு இதுகூடத் தெரியாது என்று யாராலும் சொல்லமுடியாது!

ஆனுல், இந்திய அரசியல் சட்டத்திற்கு மீறிய வாக்குறுதியைத் தந்த நேரு, உடனடியாகவோ, அடுத்த கட்டத்திலேயோ, அரசியல் 'சட்டத்தை மீறிய தமது வாக்குறுதி எவ்வாறு நிறைவேற்றப்படும்' என்பதை, விளக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

அவர், அவ்வாறு விளக்கவில்லை. வாக்குறுதி கொடுத்து ஆண்டு ஒன்றுக்குமேல் ஆகியும், மேல் முயற்சி எதுவும் செயயவில்லை.

இறுதியாகக் குடியரசுத் தலைவர் இந்தி ஆதிக்க உத்தரவு கொடுத்த உடனடியாகவாவது, நேரு தமது வாக்குறுதியை நிலைநாட்ட முயற்சி செய்திருக்க வேண்டும். அப்போதும் வாளா இருந்துவிட்டார்.

கடைசியாக குமாரபாளையம் தி. மு. க. பேரவை அறைகூவிய போதாவது, நேரு, ஏதாவது செய்யக் கடமைப்பட்டிருக்கிருர், அப்போதும் பேசாமலே இருந்துவிட்டார்.

"வடவர்பிரான் பிரசாத்துக்குக் கறுப்புக்கொடி வரவேற்பு" என்ற தீர்மானம் நிறைவேற்றிச் செயல்பட முனைந்த நேரத்தில் - சம்பத்திற்கு எழுதுகிருர்! —

"குடியரசுத் தலைவர் உத்தரவு எனது வாக்குறுதிக்கு முரணுக இல்லை. எனது உறுதிமொழி காப்பாற்றப்படும். இதில், தவருக அர்த்தம் செய்துகொண்டிருக்கிறீர்கள். கறுப்புக்கொடி பிடித்து அவமானம் செய்ய இருக்கிறீர்கள். சென்னை மந்திரி சுப்பிரமணியம், டில்லி மந்திரி, பந்து இவர்கள் நன்ருக விளக்கி இருக்கிருர்கள்."

இப்படி, என்னென்னமோ சொல்கிருர் கடிதத்தில்,

"குடியரசுத் தலைவரின் உத்தரவுக்குச் சென்னை மந்திரி சுப்பிரமணியமும், டில்லி பந்தும் 'பாஷ்யம்' செய்ய வேண்டும்! அவர்கள் 'பாஷ்யம்' தான் அங்கீகாரத்திற்குரியது!" என்று விபரீத அரசியல் சட்டம் ஏதாவது இருக்கலாமோ?

பொறுப்பு வாய்ந்த - மொழி மாறுதல் பற்றிய- ஒரு துணைக்கண்டத்தின் தலைவர் தரும் ஆணை, இரண்டு பேர் 'பாஷ்யம்' சொல்லக் கூடியதாகவா இருக்கும்? அப்படி இருக்கலாமா?

இந்தப் பாஷ்ய கருத்தர்கள் யோக்கியதை என்ன? சென்ற வாரம் முடியும் வரை சென்னை மணியமும், டில்லி பந்தும் இந்தி மொழி ஆதிக்க ஆணை குறித்து என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்? பாராளு மன்றத்தில், ஆங்கிலோ இந்தியத் தலைவரான பிராங்க் அண்டனி கேட்ட மொழியாதிக்கம் பற்றிய கேள்விகளுக்கு, டில்லி பந்து கூறிய பதில்களில், ஆத்திரம்-அலட்சியம்-அடங்கிக் கிடக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு, ஆகிய இழிதன்மைகளுடன் கடுகடுப்புடன் கூடிய மழுப்பல் வார்த்தைகளும் காணப்படுகின்றன.

சென்னை மணியமோ, செல்லுமிடங்களில் 'தி, மு. க. தலைவர் நாட்டுப் பிரிவினையை முன் வைத்து காஞ்சித் தொகுயில் போட்டியிடுவாரா?'? என்பதும், ஏதோ, சென்னை மந்திரிகளின் வேண்டு கோளுக்கிணங்கி 'கொஞ்ச காலத்திற்கு இந்தியோடு ஆங்கிலத்தையும் ஆதிக்க மொழியாக வைத்திருப்பதற்கு, அரைகுறையாக டில்லி ஒத்துக்கொண்டிருப்பதுபோலவும், தி. மு. கக்களின் போராட்டத்தினுல், இந்தச் சலுகை கெட்டு அரசியல் சட்டப்படி 1965 முதல் இந்தி மட்டுமே தனி ஆதிக்கம் செலுத்தும்படி வந்து விடலாம்" என்றும், மிரட்டினுர் - அல்லது - சலுகை விரும்பிகளை தி. மு. க. மீது ஏவினுர்!

"தமிழ்நாட்டில் தமிழ்தான் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகிறது-செலுத்தும். இந்தியைப் பற்றி கவலைப்படவேண்டியதில்லை" என்றும், தி மு. கக்கள் வேலையற்றுப் போய், இந்தி எதிர்ப்புச் செய்வதாகவும் - நாட்டுமக்கள் ஆதரவு தரக்கூடாது என்றும், தமிழ் அன்பு கொண்ட அரசியல் அப்பாவிகளை ஏவிவிட்டுக் கொண்டிருந்தார்-சென்னை மணியம்!

இந்தச் சென்னை மந்திரியும், அந்த டில்லி மந்திரியும்தான் பிரசாத்தின் ஆணைக்கு பாஷ்யம்கூறும் பொறுப்பு பெற்றவர்கள்! வேடிக்கை அல்லவா? குடியாட்சித் தலைவரின் ஆணை, நேருவின் வாக்குறுதிகளைப் புறக்கணிக்கக் கூடியதாக இருக்கிறதென்று, நாம் படித்தாலும், திரு. சம்பத் படித்தாலும், அறிஞர் அண்ணு படித்தாலும், ஒன்றுபோலக் கருதுகிருேம்.

நாம் அனைவரும் கழகத்தினர், ஆகவே, நமக்கு ஒன்றுபோலவே பொருள் தோன்றுகிறது என்று யாராவது சொல்லக் கூடும். அப்படிச் சொல்பவர்கள், சென்னை 1 8-60 ம் நாள் சுதேசமித்திரன் தலையங்கத்தைப் பார்த்து முடிவு செய்யலாம். சுதேசமித்திரன் கழக ஏடு அல்ல. அது கூறுகிறது:

[8-ம் பக்கம் பார்க்க]

அருப்புக்கோட்டை எம்.எஸ்.இராமசாமி

குறள் விழாக் கவியரங்கம்

2. திருவள்ளுவர் ஒரு தூய துறவி

—கவிஞர் அ. ந. சோமசுந்தரம் பி. ஏ., பி. டி.,

கண்ணதாசன் முன்னுரை

சாயம் போட்டவர் துறவிக ளாவார்
சாயம் வெளுத்தவர் சம்சாரம் காண்பார்.
தூய வள்ளுவன் துறவி யானது
சாயம் போட்டா தன்மனம் வெளுத்தா?
ஆய கலைகள் அனைத்தும் கற்ற
அன்பு வள்ளுவன் துறவி ஆனதை
நாம நிந்தலம் என்ப தைக்கவி
சோம சுந்தரம் சொல்லுவார் இங்கே.

தலைவா! கவிதை தருக

கவியரங்கத் தலைமைபெற்ற கவிஞ ரேறே!
கலைவல்லோய்! நாவல்லோய்! கடைக்கண் வீச்சில்
புவியுள்ளோர் எதிர்ப்பெல்லாம் தூளே யாக்கிப்
புலமையிலே தமிழ்ச்சங்க காலம் கண்டாய்
தவிக்கின்றுள் தமிழ்த்தாயுன் கவிதை கேட்க!
தலைவா! நீ காப்பியங்கள் பாட வேண்டும்.
செவிமடுத்துக் கேட்பதற்குத் தமிழர் கூட்டம்
தெருவெல்லாம் காண்கின்றேம்; பெருமை கொண்டோம்!

இல்லறத்தில் மனைவியொடும் குழந்தை யோடும்
இருக்கின்ற எனையழைத்தார் கழகத் தார்கள்
நல்லவர்கள் அழைப்பதனுல் ஓடி வந்தேன்
நயமாகச் சொன்னுர்கள் பாடாய் என்றே.
வல்லவர்காள்! தலைப்பென்ன என்று கேட்டேன்
வாயாரச் சொன்னுர்கள் துறவு என்றே
இல்லறத்தான் காதல்மொழி பாடும் நாளில்
இயம்புவதோ துறவுமொழி? விதியே! அந்தோ!

வள்ளுவரின் மதம்.

திருநீற்றுப் பட்டையிட்டுப் பூணூல் இட்டுத்
சிதறிநின்ற பயிரையெலாம் முடித்துக் கட்டித்
திருக்குறளின் தந்தையையோர் சைவ னுக்கிச்
சிரித்தார்கள் சைவமதப் பெரியார் எல்லாம்
விருப்புடைய வைணவத்தார் வள்ளு வர்க்கு
வீரமுடன் நாமமிட்டுத் தம்பால் சேர்த்தார்.
துருப்பிடித்த சமணமதச் சான்ருேர் கூடித்
தொல்புகழ்சீர் வள்ளுவர்க்கு மொட்டை போட்டே

சமணரெனச் சொல்லிவைத்தார்; இதனைக் கேட்ட
சலாமாலே கும்இஸ்லாம் சமயத் தார்கள்
நமதருமை வள்ளுவர்க்குக் குல்லாய் போட
நாடுவரேல் வியப்பில்லை; ஏற்றுக் கொள்வோம்.
சமதர்மம் வள்ளுவர்தன் குறிக்கோ ளாகச்
சாற்றியதால் அன்னவர்க்குக் காவி கட்டிக்
கமண்டலத்தைக் கைக்கொடுத்துக் கொண்டு வந்தேன்
கவியரங்கில் துறவியெனக் கவிதை சொல்வேன்.

தூய துறவு எளிதா ?

இல்லாமல் பலபேர்கள் சாமி யாராய்
இந்நாளில் மாறுகின்ருர், இருந்தும் சில்லோர்
சொல்லாமல் சாமிகளாய்ப் போகின் ருர்கள்
சோதித்தால் சாமிகளில் சிலபேர் பின்னுல்
பல்போகும் பருவத்தே இல்ல றத்தைப்
பாங்காக ஏற்கின்ற காட்சி காண்போம்.
தொல்லுலகில் துறவுகொள்ளல் சுலப மல்ல!
தூய்மைவழி நிற்பதுவும் எளிமை யல்ல !!

இலங்கைச் சாமியார்கள்.

இலங்கையிலே புத்தமதச் சாமி யார்கள்
இருகரமும் ஆயுதங்கள் ஏந்தி நின்று
பலம்பார்த்தார் அரசியலில்; பகடைக் காயாய்ப்
பழந்தமிழர் கூட்டமெலாம் உருட்டி விட்டார்.
குலத்தமிழர் கடைகளெலாம் சாமி யார்கள்
கொளுத்திவிட்டார் பகையுணர்ச்சித் தீயால் அந்தோ!
கலகத்தில் இரையாகிப் பலரும் சாகக்
கறைபடிந்த சிலகாட்சி கண்டோம் முன்னுள்!

மேனுட்டுச் சாமியார்கள்.

எரிமலைகள் கனல்கக்கும்; கடலும் சீறி
எதிர்த்தழிக்கும்; நிலம்வெடிக்கும்; இடிகள் வீழும்
கரியாகும் உலகெல்லாம் தூலை மாதம்
கணக்காகப் பதினலாம் நாளின் மாலை
சரியாக உலகெல்லாம் அழிந்து போகும்
சட்டினியாய் மக்களெலாம் நசுங்கிப் போவர்
திரிவைத்த பட்டாசாய் மக்க ளெல்லாம்
சிலநொடியில் கூண்டோடு கைலா சத்தை

அடைவார்கள் என்றுரைத்தார் மேலை நாட்டில்
அறிவில்லா மடச்சாமி யார்கள்; இன்னும்
தடையின்றித் தாம்மட்டும் வாழ எண்ணித்
தனிக்காட்டு மலையினுக்குள் பதுங்கி நின்ருர்
மடையரெனத் திட்டுவதா? சுயந லத்தால்
மதியிழந்தோர் எனக்கூறி இகழ்வோம் வாரீர்!
படைக்களத்தும் நடைபோட்டு வீரத் தோடு
பணியாற்றும் உளம்வேண்டும் துறவி யர்க்கே!

திண்ணைதூங்கிச் சாமியார்கள்

திண்ணைகளில் படுத்துறங்கும் சாமி யார்கள்
தெருவெல்லாம் திரிகின்ருர் பஞ்ச மில்லை.
பெண்கள்அவர் அருகுவந்து சோறு போட்டால்
பேசாத சாமிகளும் பேசு கின்ருர்.
தண்ணீர்தா; குழம்பெங்கே? என்று கேட்டுத்
தடியரென வாசலிலே நிற்கின் ருர்கள்.
பெண்ணெருத்தி அழகுடையாள் சோறு போட்டால்
பெருஞ்சாமி தினந்தோறும் வருகின் ருரே!

வட்டிக்குப் பணம்கொடுக்கும் சாமி யார்கள்
வாழ்கின்ருர். வியப்பில்லை. சுருட்டு பீடி
கட்டுகளாய்ப் புகைக்கின்ருர் கவலை யில்லை.
கலைசெறிந்த திரைப்படங்கள் காண வேண்டி
நட்டுவைத்த மரம்போல இரண்டாம் காட்சி
நள்ளிரவில் காண்கின்ருர். வம்பு பேசித்
திட்டுகின்ருர். ஒழுக்கத்தைத் துறந்து விட்டார்
தீயவர்கள் துறவியெனப் பசுத்தோல் கொண்டார்.

துறவென்ருல் தூய்தாக இருக்க வேண்டும்
தொல்புகழ்சீர் வள்ளுவரின் துறவைப் போல
அறம்காக்கும் துறவுகொண்டுள்; ஆசை யெல்லாம்
அழித்தொழித்தே மனநிறைவு கொள்ள வேண்டும்.
திறம்படைத்த வல்லரசுத் தலைவ ரெல்லாம்
திருக்குறள்சொல் வள்ளுவனின் துறவை ஏற்ருல்
அறம்வாழும் உலகமெலாம் அச்சம் நீங்கும்.
ஆட்சியுளார் பதவியுளார் துறவு தேவை!

வள்ளுவர் ஒரு தூய துறவி.

இல்லறத்தில் இனிதிருந்து பீற்றை நாளில்
இவ்வுலக ஆசையெலாம் நீத்து விட்டு
நல்லறமாம் துறவறத்தில் வாழ்ந்து காட்டி
நானிலத்தில் பல்லுயிர்க்கும் தொண்டு செய்து

வெல்லுகின்ற திருக்குறளைப் படைத்துத் தந்து
வெற்றிபெறும் ஒழுக்கமெலாம் எடுத்துச் சொல்லி
வல்லவனுய் நல்லவனுய் வாழ்ந்த தாலே
வள்ளுவனைத் தூய்மைநிறை துறவி என்றேன்!

வேள்வி ஆயிரம் செய்தலைக் காட்டிலும்
விரும்பிச் சடைமுடி வளர்ப்பதைக் காட்டிலும்
நாள்மு முக்கநீர் நெருப்பு மத்தியில்
நற்ற வம்பல புரிதலைக் காட்டிலும்
தாள்ப ணிந்திடும் வாயில் உயிர்களைத்
தலைப றித்துப் பிரியாணி போட
வாள்மு னையினிற் கொல்லா திருப்பதும்
வாங்கி அதனுயிர் தின்னு திருப்பதும்
நன்றெனச் சொன்னுன் வள்ளுவன் அதனை
நன்னெறித் துறவியர் ஏற்பர் வாழ்வில்
சொன்னதைச் செய்தான் வள்ளுவன் அதனுல்
துன்னருந் தூய துறவி என்றேனே.

பின்னுரை

உறவெடுத்துத் தனியிடத்தைத் தேடும் நாளில்
உயர்கவிஞர் துறவறத்தைப் பாட வந்தார்.
இரவினுக்கும் மாலைக்கும் ஏங்கி நிற்கும்
இளைஞரிவர் துறவறத்தை எவ்வா ருய்ந்தார்?
குறளுடையான் துறவுநிலை படித்துச் சொன்னுன்
குணமுடைய கவிஞரதை நாட வேண்டாம்
உறவினிலே முதுமைவரை விழுந்து தேய்ந்தே
ஓடாகி வாழ்கஇவர் வாழ்க! வாழ்க!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 7 | 20-8-'60 | இதழ் 10

குடந்தை இராமலிங்கம் கொலை ?

காங்கிரேசில் புதிதாகச் சேர்ந்திருக்கும் தங்கப்பழம் குடந்தையில் கழகத்தலைவர்களைத் தாக்கிப் பேசினார். "ஐயா, கொள்கைகளைத் தாக்கிப் பேசுங்கள். மக்கள் போற்றும் தலைவர்களை மனம்போன போக்கில் மரியாதைக் குறைவாகப் பேசாதீர்கள்!" என்று குரல் எழுப்பினார் இராமலிங்கம். காங்கிரசுக்காரர்கள் வளைத்துக் கொண்டார்கள். தோழர் இராமலிங்கம் போலீசார் வசம் ஒப்படைக்கப் பட்டார். போலீஸ் நிலையத்திற்கு வந்த சிறிது நேரத்தில் அவர் மயக்கமடைந்தார். உடனே மருத்துவ மனையில் சேர்க்கப் பட்ட இராமலிங்கம் அங்கே இறந்து போனார்.

கூட்டத்தில் அவர் கலாட்டாச் செய்தாராம். அதற்காகக் காங்கிரசார் அவரைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைத்தார்களாம். இறந்துபோன பின் நடந்த மரண விசாரணையில் அவர் மூட்டைப் பூச்சி மருந்தைத் தின்று தற்கொலை செய்து கொண்டதாகக் கண்டு பிடிக்கப் பட்டதாம். உயிர் போகுமுன் அவரிடம் வாக்கு மூலமும் வாங்கப் பட வில்லையாம். இது போலீஸ் மந்திரி தரும் தகவல்,

மறுநாள் சவ ஊர்வலத்தின் போது போலீசார் 144 தடையுத்திரவு போட்டிருக்கிறார்கள்.

சவ ஊர்வலத்திற்குத் தடையுத்தரவு போட்டும், உயிரிழந்தவரைப் பற்றித் துயரமுற்று பின்சென்ற மக்களைத் தடியால் அடித்துக்காயப் படுத்தியும் ஒரு சிலரைக் கைது செய்து கொடுமைப் படுத்திய போலீஸ் நிர்வாகம் இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கிடையாது.

இந்தச் செய்திகள் எல்லாம் சேர்ந்து குடந்தை இராமலிங்கத்தின் சாவு ஒரு மர்மம் என்பதை மெய்ப்பிக்கின்றன, இது ஒரு கொலையாயிருக்குமோ என்ற ஐயத்தை எழுப்புகின்றன.

கூட்டத்தில் கலாட்டா செய்ததாகச் சொல்லப் படுபவர். போலீசாரால் நேரடியாகக் கைது செய்யப் பட்டதாகச் செய்தியில்லை.

காங்கிரசுக் காரர்கள் அவரை வளைத்துப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைத்ததாகச் செய்தி தெரிவிக்கிறது. அப்படியானால், காங்கிரஸ்காரர்கள் அந்த இளைஞரை அடித்தார்களா? போலீஸ் துறை சரியான பதில் தரவில்லை. அந்த இளைஞரை அடித்தவர்கள் யாராவது கைது செய்யப்பட்டார்களா? அப்படிச் செய்யப்பட்டதாக இதுவரை தகவல் இல்லை.

போலீஸ் நிலையத்தில் அவர் சாகும்படியாகக் கொடுமைப்படுத்தப்பட்டாரா ! இது மிகவும் முக்கியமான கேள்வி. இதற்கும் தகுந்த பதில் இல்லை,

பிரேத விசாரணை செய்த பஞ்சாயத்தார், அந்த இளைஞரின் மர்மஸ்தானம் அடிக்கப்பட்டு வீங்கியிருப்பதாகக் கருத்துத் தெரிவித்தாக ஒருசெய்தி உலவுகிறது. இதை அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்ள வில்லை.

காங்கிரசுக்காரர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது—அதிலும் இப்போது புதிதாகக் காங்கிரசில் சேர்ந்துள்ளவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது நாடறிந்த விஷயம். அவர்கள் இராமலிங்கத்தைச் சாகும் நிலைக்கு அடித்து இருக்கலாமென்று எண்ண இடமிருக்கிறது.

போலீஸ் நிலையத்தில் அவர் துன்புறுத்தப் பட்டிருக்கலாம் என்றும் எண்ண இடமிருக்கிறது. இன்று போலீசார் காங்கிரஸ்கட்சியின் கையாள்களாகப் பயன் படுத்தப்படுகிறார்கள் என்பதை நாம் பல சந்தர்ப்பங்களிலே அறிந்திருக்கிறோம். போலீசார் மறுநாள் 144 தடை யுத்தரவு போட்டதைப் பற்றி யோசித்துப் பார்க்கும் போது, இந்த சந்தேகம் வலுப்படுகிறது. பொது மக்களுக்கு ஆத்திர மூட்டும்படியான ஏதோ ஒரு கொடுமை நடந்திருப்பதால் தான், அந்த ஆத்திரத்திற்கு இடங்கொடுத்து விடக் கூடாதென்று 144 தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கலாம் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

குடந்தை இராமலிங்கம் இறந்ததற்குக் காரணம், கூட்டத்தில் காங்கிரசுக் காரர்கள் அவரைக் கொடுமைப் படுத்தியதாக இருக்க வேண்டும், அல்லது போலீஸ் நிலையத்தில் கொடுமைப் படுத்தியதாக இருக்க வேண்டும். முதலாவது காரணம் சரியாக இருந்தால், போலீசார், கலாட்டா செய்ததாகச் சொல்லப்படுகிற இராமலிங்கத்தை ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றதுபோலவே, அவரை அடித்தவர்கள் சிலரையும் கைது செய்திருக்க வேண்டும். அவர்கள் அப்படிச் செய்யாததை நோக்கும்போது அவர்கள் அநியாயத்திற்கு உடந்தையாயிருந்தவர்களாகிறார்கள். இரண்டாவது காரணம் சரியாக இருந்தால் அவர்களே அநியாயக்காரர்களாகிவிடுகிறார்கள்.

போலீஸ் நிலையங்களில் இந்தக் கொடுமை இப்போது அடிக்கடி நடந்து வருகிறது.

காங்கிரசார் தங்களுக்குப் பிடிக்காதவர்களை ஒழிப்பதற்கும் போலீசையே குண்டர்களாக உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள் என்ற கருத்தைத்தான் இப்படிப்பட்ட சமீப காலமாக நடந்து வருகிற நிகழ்ச்சிகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட அக்கிரம ஆட்சியை மக்கள் எப்பொழுதும் ஏற்றுக் கொண்டிருக்கமாட்டார்கள். என்பதை ஆளுவோர்-ஆளும் காங்கிரசார் உணர வேண்டும், போலீஸ் நிலையங்கள் மக்களுக்குக் காவல் நிலையங்களாக இருக்க வேண்டுமே தவிர-கொலைக்களங்களாகப் பயன்படக்கூடாது.

குடந்தை இராமலிங்கம் இறந்ததுபற்றி எழக்கூடிய சந்தேகங்களை மறைப்பதற்காகவே, அவர் மூட்டைப்பூச்சி மருந்து சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்படுகிறது. என்று எண்ண வேண்டியிருக்கிறது.

வாழ்க்கையில் வெறுப்படைந்து அவர் விஷமருந்தி யிறந்ததாகக் கூறப்படுகின்ற கூச்சரைச் சாதாரண அறிவுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை ஏனோ இவர்கள் அறியவில்லை. அறிந்திருந்தால், எப்படியும் உண்மையை மறைத்துவிடலாமென்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்பட்டிராது.- இப்படிப் பொருந்தாக் காரணங்களைக் கூறவும் முன் வரமாட்டார்கள்.

வாழ்க்கையில் வெறுப்படைந்தவராக இருந்தால் அந்த இளைஞர் விஷ மருந்தைத் தின்றுவிட்டு வீட்டுக்குள்ளே கிடந்தல்லவா உயிரை விட்டிருப்பார் ? பொதுக் கூட்டத்திற்கு ஏன் வர வேண்டும் ? சாகப் போகிறோம் என்பது தெரிந்தவராக இருந்திருந்தால், அவர் சஞ்சலப்பட்டுக்கொண்டு தன் மரணத்தை எதிர் நோக்கியல்லவா இருந்திருப்பார் ? கூட்டத்திலே வந்து எங்கள் மதிப்பிற்குரிய தலைவரை இகழாதே என்று வீர கர்ஜனை புரிந்திருப்பாரா ? என்பதெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போதுதான், இராமலிங்கத்தின் சாவுக்குப் பின்னாலே 'சதி' யிருக்கிறது என்று வெள்ளிடை மலையாகத் தோன்றுகிறது.

இவ்வளவு மோசமான தன்மையில்-சதியா கொலையா என்று கருதும் வகையில் நடந்திருக்கும் இந்த மரணம்பற்றி நீதி விசாரணை நடத்தினால்தான், அரசாங்கமோ, போலீசோ, மக்களுக்குப் பாதுகாப்பாயிருக்கிறதென்று கருத முடியும். இல்லாவிட்டால், காங்கிரசுக்காரனாக இருந்தால்தான் வாழலாம்-கருத்து மாறுபட்டவன் வாழமுடியாது என்ற நிலையை இந்த ஆட்சி உருவாக்கிவருகிறது என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

சட்டமன்றத்தில் இதுபற்றிய கேள்விகளுக்குப் போலீஸ் துறை அமைச்சர் பக்தவத்சலம் கூறிய பதில்கள் திருப்தியளிக்கக்கூடியவையாயில்லை. கடைசியில் தகுந்த நீதி விசாரணை நடத்த ஏற்பாடு செய்வீர்களா என்று கேட்டதற்கு வழக்கமான விசாரணைதான் நடைபெறும் என்று கூறிவிட்டார் அவர்.

இந்த நிகழ்ச்சியும் காங்கிரஸ் ஆட்சியின் மீது அவநம்பிக்கை கொள்ளும் படியான நிலைமையைத்தான் உருவாக்க உதவுகிறது. நியாயம் தெரிந்தவர்களாயிருந்தால்-அந்த நியாயத்திற்கு இடம் இருக்கிறது என்று காட்ட எண்ணுபவர்களாயிருந்தால் நீதி விசாரணை நடத்த ஒப்புக்கொள்ள வேண்டும். இறந்தவன் எதிர்க் கட்சிக்காரன் கொன்றவன் காங்கிரஸ்காரன் அல்லது காங்கிரஸ் கருத்தறிந்து நடக்கின்ற போலீஸ்காரன் ஆக இருக்கலாம் என்பதற்காக நீதி விசாரணை நடத்தாமல் மக்கள் கண்ணிலே மண்ணை வாரித் தூவி மறைத்து விடலாம் என்றால், அந்த ஆட்சியின் மீது மக்கள் அவநம்பிக்கை கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அறிய வேண்டும்

மனிதன் இந்த ஆட்சியில் உயிரோடு வாழமுடியுமா என்ற முக்கிய பிரச்சினையாக இது இருப்பதால், மீண்டும் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம், நீங்கள் ஓரளவாவது மனித உரிமைகளையும்-நியாய நெறி முறைகளையும் கடைப்பிடிக்கிறீர்கள் என்று காட்டிக்கொள்வதற்காவது நீதி விசாரணையொன்று நடத்துங்கள் என்று.

நீதி விசாரணை ஒன்றுல்தான் உண்மையை நிலை நிறுத்திக் காட்டமுடியும். இதை உணர்ந்து செயலாற்றுமா இந்த அரசாங்கம்?

கவிஞர் சுற்றுலா.

நக்கீரர் கழகத்தின் சார்பாக சென்னையிலிருந்து திருவாலங்காடு, பழையனூர், திருப்பாசூர், திருவள்ளூர் ஆகிய ஊர்களுக்கு கவிஞர்கள் சுற்றுலா முன் ஏற்பாட்டின்படி பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் தலைமையில் 20-8-1960 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. கட்டிடத்தின் முன்னின்று புறப்படுகிறது.

பேராசிரியர்கள், ந. சஞ்சீவி, மயிலை சிவமுத்து, டி. ஏ. வி. நாதன், டி. எஸ். ஸ்ரீபால், அன்புப்பழம்நீ, வல்லை பாலசுப்ரமணியம் ஆகியோர் முக்கிய பங்கு கொள்கிறார்கள். திருவாட்டிகள் எஸ். இராஜலட்சுமி, எம். ஏ., ஆர். எஸ். பங்கயச்செல்வி ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள். திரு என் சங்கரன் அவர்கள் தலைமையில் நடக்கவிருக்கும் கவிதையரங்கில் கவிஞர்கள் நாகமுத்தையா, தணிகை உலகநாதன் [illegible] நச்சியப்பன், வேழவேந்தன் ஆகியோர் பங்கேற்கிறார்கள். சிறுவை மோகனசுந்தரம அவர்கள் ஏற்பாட்டில் புறப்படும் இந்தச் சுற்றுலா சிறப்புற வாழ்த்துகிறோம !

இந்தி வெறியர் இராசேந்திரப் பிரசாத்

கடற்கரைப் பேச்சில் கக்கிய விஷத்துளிகள்!

ஏமாற்றுப் பேச்சும் ஏகாதிபத்திய வெறியும்

இறுதிவரை போராடத்தான் வேண்டும்!

இந்தத் தலைப்புக்களைக் கண்டவுடனேயே, "தம்பீ! ஆத்திரம் கொள்ளாதே!" என்று தடுக்கும் அன்புக்குரல் என் காதில் விழுவதைக் கேட்கிறேன். இருந்தாலும் என்னால் ஆத்திரங்கொள்ளாமல் இருக்க முடியவில்லையே! ஒரு வெறியர்-அதிலும்தான் ஒரு வெறியராக இருந்துகொண்டே, நம்மைப் பார்த்து ஜாதிவெறி கொண்டவர்கள், மொழி வெறி கொண்டார்கள் பிரதேசப் பித்துக் கொண்டவர்கள் என்று சொல்லுவதென்றால் அதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்?

போராட்டத்தில் குதிக்கவேண்டும், குண்டடி பட்டாலும் தண்டமிழைக் காத்த பெருமையோடு உயிரைவிட வேண்டும். கால் கை போனாலும் தாய்மொழிக்கோர் ஊனமில்லாமல் செய்துவிட்டோம் என்ற இன்ப எண்ணத்தோடு வாழ்நாளைக் கழிக்க வேண்டும், வேதனைகள் ஆயிரம் வந்தாலும் நம் சாதனைகள் வென்ற தென்ற மனநிறைவு கடைசிவரை இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு துடிதுடித்துக் கிளம்பினோம் நாம்! என்ன ஆனாலும், எப்படியாவது இந்த நாட்டிலே இந்தி நுழையாமல் செய்யவேண்டும் என்ற உறுதி பெற்றிருந்தோம் நாம். அப்படிப் பட்ட உறுதி நிறைந்தவர்கள் - எப்போது போர் என்று எண்ணிக் காத்திருந்தவர்கள் - தலைவரின் ஆணைப்படி வரப்போகின்ற இந்தி வெறியருக்குக் கருப்புக் கொடி காட்டி நம் வெறுப்பைத் தெரிவித்திட வேண்டுமென்று எண்ணியிருந்த நாம் குமுறுகின்ற நெஞ்சத்தை அடக்கிக்கொண்டோம். ஏன்?

குடியரசுத்தலைவர் ஐதராபாத்திலே கூறினார் இந்தி மொழியைத் திணிக்க மாட்டோம் என்று.

முதலமைச்சர் கடிதம் எழுதினார் என் உறுதிமொழிகள் மீறப்படவில்லை என்று.

ஆங்கிலத்தை நீடிக்கப் பாராளுமன்றத்தில் மசோதா கொண்டு வருவோம் என்று கூறினார் பந்த்.

இப்படிப்பட்ட உறுதிமொழிகளை நம்பித்தானே எரிமலைகள் வெடிக்காமல் இருந்தன.

ஆனால், கடற்கரையிலே பேசிய இராசேந்திர பிரசாத்திற்கு தம் வெறியைக் காட்டிக்கொள்ளும் அளவுக்குத் தைரியம் வந்துவிட்டது.

கடற்கரையிலே பேச ஆரம்பித்த இராசேந்திர பிரசாத் முதன்முதலிலே தமது பதவியைப் பற்றித்தான் பேச ஆரம்பித்தார். பாவர்! பதவியைக் காட்டினால் பயப்பட்டுவிடுவார்கள் என்று எண்ணினாரோ என்னவோ! இந்தியாவிலேயே மிகவும் உயர்ந்த பதவியாம் அது! அதை எதற்குச் சொன்னார்-ஏன் சொல்லவேண்டும்? உங்களுக்கெல்லாம் பெரிய எஜமானன் நான்தான் என்று எடுத்துக் காட்ட எண்ணினாரோ என்னவோ?

என்ன பதவியில் இருந்தால் என்ன? கடைசியில் சங்கராசாரியின் காலில் விழுந்து பாதபூசை செய்கின்ற தூசியாகத்தானே காட்சியளிக்கிறார் பிரசாத்.

பத்தாம்பசலிக் கொள்கைகளும், பார்ப்பனர்களின் பாதத்தைக் கழுவிப் பூசை செய்யும் பண்பற்ற பழக்க வழக்கங்களும் உடைய இராசேந்திரப் பிரசாத் தமது பெரிய பதவியைப் பற்றிக் கூறினார்.

அவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், எல்லாக் காரியங்களும் தன் பெயராலேயே நடத்தப்பட்டாலும், அவற்றின் பொறுப்புக்கள் தன்னைச் சாராதாம். இப்படியெல்லாம் பேசுகிறாரே, இந்தியைத் திணிப்பது தன் விருப்பமல்ல என்று சொல்ல வருகிறாரோ என்று மக்கள் எண்ணும்படியாக இருந்தது அவருடைய பேச்சின் ஆரம்பம்.

இதுமட்டுமல்ல. இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியில் குந்தியிருக்கும் அந்த பழமைப் பித்தர் இராசேந்திரப் பிரசாத், இந்திய அரசியலமைப்பு பிரிட்டிஷாரின் அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்டதென்றும், அந்தப் பிரிட்டிஷாரின் அரசியலமைப்பு எப்படியெப்படியெல்லாம் மக்கள் எண்ணத்திற்குத் தகுந்தபடி வளைந்து கொடுக்கிறதோ அப்படியெல்லாம் இதுவும் வளைந்து கொடுக்கக் கூடியதென்றும், கூறினார். ஏதேது? இராசேந்திரர் கூட இந்தி மொழி யாதிக்கத்தைத் தவிர்க்க அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்க முன் வருகிறாரோ என்று எண்ணும்படியாக இருந்தது அவர் பேச்சின் தொடர்ச்சி.

இத்தோடு நில்லாமல் மைனாரிட்டிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியல் அமைப்பில் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறது என்று கூடக் கூறினார்.

இவற்றிற்கெல்லாம் மேலாக நாங்கள் உங்கள் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்கிறோம் ஆட்சி மொழி விஷயத்தில் உங்களுடைய விருப்பங்களுக்குப் பூரண மதிப்புக் கொடுக்கிறோம் என்றும் கூறினார்.

ஆகா! மக்கள் உணர்ச்சியை எவ்வளவு மதிக்கிறார் இந்தக் குடியரசுத் தலைவர் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதுதான் ஒரு பேரிடியைத் தூக்கிப் போட்டார் பிரசாத். தான் ஒரு முதல்தரமான வெறியர்-மொழி வெறியர்-இன வெறியர் என்பதை அழுத்தத் திருத்தமாக ஒளிவு மறைவில்லாமல் அப்படியே காட்டிவிட்டார்.

"உங்களுடைய உணர்ச்சிகளை மதிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்! அவ்வாறே நாங்கள் மதிக்கிறோம். ஆனால், நீங்கள் எங்கள் மீது ஓர் அன்னிய மொழியைத் திணிக்காதீர்கள்!" என்று சொன்னார் அவர். இராசேந்திர பிரசாத் தான் கெட்டிக்காரத்தனமாகப் பேசிவிட்டதாக எண்ணிக் கொண்டிருப்பார். ஆனால், எவ்வளவு புத்தி கெட்டதனமாக இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் என்பதை அவர் இன்றில்லாவிட்டாலும் நாளையாவது புரிந்துகொள்ள வேண்டும்.

ஆங்கில மொழியே தொடர்ந்து இருந்து வரட்டும என்று நாம் சொல்லுவதைக் கண்டித்துப் பேசிவிட்டதாக அவர் கருதது. எத்தனை தடவைதான திருமபத் திரும்ப விளக்கங்கள் சொன்னாலும் அந்த வெள்ளைக்குல்லாய் போட்ட மண்டைகளுக்குள்ளே ஏறுதுபோலிருக்கிறது!

ஆட்சி மொழியாக இருந்து வருகிற ஆங்கிலம் உலக மொழியாக இருக்கும் பெருமை பெற்றது.

சாதாரண மனிதன் ஒருவன் தன் தாய் மொழியோடு ஆங்கிலமும் கூடப் படித்தால் உலகத்தோடு தாராளமாக அளவளாவ முடியும் என்ற நிலையிருக்கும்போது, ஏன் மூன்றாவதாக ஒரு மொழியை வருந்திக் கற்றுக்கொண்டு அல்லற்பட வேண்டும்? இரண்டு காரியங்களுக்குப் பயன்படக்கூடிய ஒரே மொழியை ஏற்றுக்கொள்வதைவிட்டு ஒரு தகுதியுமில்லாத இந்தியை ஏன் பெருவாரியான மக்கள் மீது திணிக்க வேண்டும்? ஆங்கிலேயர்களின் அரசியலமைப்பு முறையை ஏற்றுக் கொண்ட அறிவாளிகள்-அவர்களுடைய மொழியையும் ஏற்றுக்கொண்டால் என்ன கேடு வந்துவிடப் போகிறது? அரசியலிலே வெள்ளையன் அடிச் சுவட்டைப் பின்பற்றுவது நல்லது என்று நினைக்கின்றவர்கள் அவனுடைய மொழியை அரசியல் காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதால் என்ன கேடு வந்துவிடப் போகிறது?

இத்தகைய காரணங்களைச் சொல்லி, மக்களுக்குத் தொல்லை தர வேண்டாமென்று கூறுகிற நாம் மொழி வெறியர்களாம்! பிரதேசப் பித்துப் பிடித்தார்களாம். அன்னிய மொழியையா நாம் வைத்துக் கொள்வது? எங்களுடைய இந்தி மொழியைத்தான் வைத்துக்கொள்ள வேண்டும். அது படித்தவர்களுக்குத்தான் அரசாங்கத்தில் வேலை தருவோம் என்று கூறுகிற இந்த இந்தி வெறியர்கள் தேச பக்தர்களாம்!

தங்கள் மொழியை இந்திய அரசியல் மொழியாகத் திணிப்பதன் மூலம் இந்தி வாலாக்களின் ஏகாதிபத்தியத்தை நாட்டிலே மறைமுகமாகத் திணிக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கும் பிரசாத இப்படிப் பேசுகிறார்.

வெறி பிடித்த இராசேந்திர பிரசாத், தமிழர்களை மட்டந் தட்டிவிட்டதாக எண்ணிக்கொண்டு. "எங்கள் மீது நீங்கள் ஓர் அன்னிய மொழியைத் திணிக்க வேண்டாம்" என்று கூறியபோது எவ்வளவு ஆவேசத்தோடு பேசினார் என்பதையும், அவருடைய ஆத்திரத்தின் காரணமாகத் தொடர்ந்து பேசமுடியாமல் எவ்வளவு தடுமாறினார் என்பதையும், கடற்கரைக்கு வந்திருந்த மக்களும்-அந்த ஒலிபெருக்கிக் கருவிகளும் கடல் காற்றும்தான் அறிந்திருக்க முடியும்.

இந்தியைத் திணிக்கமாட்டோம் எனறு உறுதிமொழி கூற வேண்டிய இராசேந்திர பிரசாத் என்ன உறுதி மொழி கூறினார் தெரியுமா? "நீங்கள் ஆங்கிலேயர்களைத் தோற்கடிக்கும்படியாக ஆங்கிலம் கற்றுக்கொண்டீர்கள்! இந்தியிலும் இந்திக்காரர்களைத் தோற்கடிக்கும்படியான திறமையை எளிதாக அடைந்து விடுவீர்கள். ஆகவே, இந்தியை ஒப்புக்கொண்டால், சர்வீஸ்களிலோ, மற்ற துறைகளிலோ மோசமான நிலையை அடைந்துவிடுவோம் என்று அஞ்ச வேண்டியதில்லை" என்று இந்தி மொழி ஆட்சி மொழியான பின் நாம் வேலை கிடைக்காதென்று பயப்படத் தேவையில்லை என்ற உறுதி மொழியைத் தந்தார்.

ஏகஇந்தியாவின் மிக மகோன்னதமான பதவியிலே இருக்கும் அந்தப் பத்தாம்பசலித் தலைவர் அன்று பேசும்போதெல்லாம், நாங்கள், நீங்கள் என்றே பிரித்துப் பிரித்துப் பேசியதை நாடறியும்! வடவர்களின் ஆதிக்கத்தைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதைக் கண்டு அவர் ஆத்திரப்பட்டுப் பேசியதை யாவரும் அறிவர்.

இத்தகைய இந்தி வெறியர் - தம்முடைய உத்தரவைத் திரும்பப் பெறுவார் என்று நாம் எதிர்பார்ப்பதில் பொருளேயில்லை இத்தகைய ஆதிக்க வெறியர், மற்றவர் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுப்பார் என்று நாம மனதார நினைப்பதற்கில்லை. இந்தியைத் திணிக்கிறார்களே-புதுப் புது உத்தரவுகள் மூலம் மக்களைக் கொதிப்படையச் செய்கிறார்களே என்று நொந்து போயிருக்கும் நம்மைப் பார்த்து, எங்கள்மீது அன்னிய மொழியைத் திணிக்காதீர்கள் என்று எதிர் வழக்காடுகிற இந்தப் பத்தாம்பசலித்தலைவர் - சாணிக்கும் மாட்டு மூத்திரத்திற்கும் வேதப் பொருள் ஓதும் சங்கராசாரியின் காலை வருடிப் பாதபூசை செய்யும் இந்தப் பழமைவாதி இந்தியைக் கைவிடுவார் என்று எண்ணுவதற்கே இடமில்லை!

இருந்தாலும் நாம் தவணை கொடுத்திருக்கிறோம்! இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன. அதற்குள்ளே, இந்த வெறியர் தம் உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும். அல்லது இன்னொரு புது உத்தரவு வெளிபட வேண்டும். இல்லாவிட்டால், நாம், அரசியல் சட்டம் திருத்தப்படும் வரையிலே போராடியே தீர வேண்டும்.

இன்று தமிழகத்திலே, தமிழுக்காக-தமிழ் மக்களுக்காகப் பாடுபடக்கூடிய கட்சி, தி மு. கழகம் ஒன்றேதான்! இந்த இக்கட்டான நிலையில் நாமும் தீவிரமாகப் போராடி வெற்றி பெறவில்லையானால் இந்த நாட்டிற்கு வேறு நாதியில்லை, இந்தியை-இந்தித் திணிப்பை சட்டபூர்வமாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் மொழி வெறியர்களின் ஆதிக்கப் பிடி, பின்னால் தடுத்து நிறுத்த முடியாதபடி இறுக்கமாகிவிடும், இந்தத் தொல்லையிலிருந்து தப்பும் வரை-நிச்சயமான நிலை ஏற்படும் வரை நாம் தீவிரமாகப் போராடியே தீர வேண்டும்!

—நாகநாதன்.

வாய்வு சூரணம்.

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண வாய்வு, இடுப்புப் பிடிப்பு, அஜீரணம், பசியின்மை, வயிற்றுவலி இவைகளை அறவே நீக்கக்கூடியது.

5-பலம் டின் ரு. 3-50.

சம்பு இண்டஸ்ட்ரீஸ், சேலம்-2. இலங்கையில் கிடைக்கும் இடம் ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி.

வரங் கொடுத்த சுவாமியார்!

சிறுகதை: வேத்தரசன்.

நிர்மலானந்த சுவாமிக்குக் கடந்த சில வாரங்களாக தியானத்தில் நெஞ்சு படியவில்லை. காரணம் இந்த மக்கள் கூட்டம்தான்! ஊரெங்கும் நிர்மலானந்த சுவாமியின் பெயர்தான் பெரிதாக அடிபட்டது. ஊரிலே யார் வீட்டிலே எப்படிப்பட்ட குறை என்றாலும் நிர்மலானந்த சுவாமியைத்தான் தேடி வந்தார்கள்-பரிகாரந் தேடி. "சே! சே! சிறிது நேரம் நிம்மதியாக ஆண்டவனைத் தியானிக்கக்கூட விடமாட்டார்கள் போலிருக்கிறதே! நல்ல மனிதர்கள்!" என்று தயையே உருவான அந்த சுவாமியும் சலித்துக்கொள்ள வேண்டி வந்தது.

நிர்மலானந்த சுவாமி காஷாயம் பூண்ட ஆரம்பத்தில் அவருக்கு இவ்வளவு சிரமமில்லை - சிறப்பும் இல்லை என்பதுதான் உண்மை. அப்போதெல்லாம் கால் போன திசையில் நடந்து செல்வதும், கண் பார்த்த இடத்தில் கையை யேந்துவதும். கையில் விழுந்த பிச்சையைப் போட்டு வயிற்றை நிரப்புவதும், பிறகு நிம்மதியாக ஓர் அரச மரமோ ஆல மரமோ தேடிச் சென்று அதன் அடியில் ஆனந்த நிஷ்டை புரிவதும் இப்படியாகத்தான் வாழ்வு கழிந்துகொண்டிருந்தது.

நிம்மதியான இந்த வாழ்வுபோல் இன்று சிறிதுகூட ஓய்ந்தொழிந்து இருக்க விடாமல் இந்தக் கூட்டம் சூழ்ந்துகொள்ளும்படி அவருடைய வாழ்க்கையிலே திருப்பம் ஏற்பட்ட கதை யிதுதான்:—

ஒரு நாள் ஒரு காட்டு வழியாக இரண்டு இளந் தம்பதிகள் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் பக்கத்தூரில் நடந்த திருமணத்திற்குப் போய்த் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கள்ளர்கள் வழி மறித்துக் கையில் இருந்த பொருள்களைக் கொள்ளையடித்துவிட்டார்கள். கைப்பொருளை யிழந்து கண்ணீரும் கம்பலையுமாக வீடு திரும்பி வரும் வழியில் எதிரில் நிர்மலானந்த சுவாமி சென்று கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் அந்த இளந் தம்பதிகள் அவரிடம் தாங்கள் அடைந்த கதியைச் சொல்லி யழுதார்கள். அவர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். அவர்கள் மனத் துன்பத்தை மறைப்பதற்காக "குழந்தைகாள்! உங்களுக்கு சீக்கிரமே நல்ல காலம் உண்டாகும்படி ஆண்டவன் அருள் புரிவார்" என்று வாழ்த்தி யனுப்பினார்.

அதனால் வந்ததுதான் இந்த வினை!

அந்த இளந் தம்பதிகள் ஊர் வந்து சேர்ந்தவுடனேயே சுவாமிகளின் வாக்குப் பலித்துவிட்டது. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல-அந்த நிகழ்ச்சி நடந்தது. ஆனால், சுவாமியார்தான் ஞானக் கண்ணால் கண்டு தங்களுக்கு அந்த இன்பச் செய்தியை முன்கூட்டியே கூறினார் என்று அவர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுவிட்டார்கள்.

அவர்கள் வீட்டிற்குத் திரும்பி வந்த போது தொலைக்குப் போயிருந்த அந்த இளைஞனுடைய தந்தையார் திரும்பி வந்திருந்தார். மலேயா நாட்டில் வாணிகம் செய்யச் சென்றிருந்த அவர் தாய் நாட்டிற்குத் திரும்பிவிடுவார் என்ற நம்பிக்கையே அவருடைய குடும்பத்தினருக்கு இல்லாமலிருந்தது. ஆனால், அவர் எதிர்பாராத விதமாக அப்போது வந்திருந்தார். வந்தவர் சும்மா வரவில்லை. அத்தனை ஆண்டுச் சம்பாத்தியப் பொருள்களோடும் திரும்பி வந்திருந்தார். மகனுக்கும் மருமகளுக்கும் ஆடை யணிகலன்களும், அலங்காரப் பொருள்களும், இன்னும் ரேடியோ சைக்கிள், போன்ற நவநாகரிகப் பொருள்கள் பலவும் கொண்டு வந்திருந்தார். இப்படி அந்த இளந் தம்பதிகள் வாழ்விலே திடீரென்று அடித்த யோகமும், அந்த யோகத்திற்குக் காரணம் என்று கருதப்பட்ட சுவாமியார் வாக்கும், அந்த ஊரெங்கும் காட்டுத் தீப்போல் பரவியது. அதற்கு மறுநாள் தற்செயலாக அந்த ஊருக்குப் பிச்சைக்கு வந்து சேர்ந்த சுவாமியார், வழியாக அந்த ஊர் மக்களிடம் அகப்பட்டுக்கொண்டார்.

நிர்மலானந்த சுவாமிகளுக்கு பலப் பல சீட கோடிகள் ஏற்பட்டார்கள். அவரிடம் ஆருடம் கேட்கப் பெண்கள் நான் முந்தி நீ முந்தி என்று அடித்துக் கொண்டும் இடித்துக்கொண்டும் வந்து சூழ்ந்துகொண்டார்கள். அவருடைய சாப்பாட்டு வசதிகளைக் கவனித்துக் கொள்ளப் பணக்காரர்கள் நான் முந்தி நீ முந்தி என்று வந்தார்கள். சீக்கிரத்தில் அவருடைய சீட கோடிகள் எல்லோரும் சேர்ந்து அவருக்கென்று ஒரு தனி மடம் கட்டி, அரசமரத்தடியில் இருந்த சுவாமியாரை மடாலயத்திற்கு எழுந்தருளச் செய்துவிட்டார்கள். பாத பூசைகளும், காணிக்கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்தன. அவர் சொன்னதெல்லாம் தெய்வ வாக்கு என்று நம்பினார்கள். அவர் வாய் திறந்து சொன்ன வார்த்தையெல்லாம் வேத கட்டளை என்று ஏற்றுக்கொண்டார்கள். இதெல்லாம் நினைத்துப் பார்த்தால் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால், சுவாமியாருக்கு முன்னிருந்த நிம்மதி இப்போது இல்லை. சுவாமியார் எல்லோருக்கும் நல் வாக்குத்தான் கொடுத்தார். அதன்படி நன்மையடைந்தவர்கள் மேலும் மேலும் அவருடைய கீர்த்தியை மேலோங்கச் செய்தார்கள். அந்த வாக்கு நிறைவேறாமல் தீமை யடைந்தவர்கள் அந்தத் தீமையைப் பெரிதாகப் பேசவில்லை. சுவாமிகள் மேல் குற்றம் சொன்னால், தங்களை அந்தப் பக்த கோடிகள் சும்மா விடமாட்டார்கள் என்று அஞ்சிப் பேசாமல் இருந்தார்கள். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று எண்ணி விதியை நொந்து சும்மா இருந்தார்கள்,

ஒரு நாள் ஓர் ஏழைக் குடியானவன் சுவாமிகளைத் தேடி வந்தான், 'சுவாமி! ஒருவாரமாக என் பிள்ளை படுத்த படுக்கையாகக் கிடக்கிறான்! ஒரே பிள்ளை! நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்!' என்று வேண்டினான். சுவாமியார் வழக்கம் போல, 'பிழைத்துக் கொள்வான், போ!' என்று வாழ்த்தி யனுப்பினார். ஆனால், மறுநாளே அந்தக் குடியானவன் திரும்பி வந்து அவர் பாதத்தைப் பிடித்துக் கொண்டு பச்சைக் குழந்தை போல் கதறிக் கதறி அழுதான். 'சுவாமி! உங்கள் வாக்கும் பொய்யாகி விட்டதே! இந்தப் பாவியால்!' என்று சொல்லித் தரையில் முட்டிக் கொண்டான்.

சுவாமி நிர்மலானந்தருக்கு மனம் சலித்து விட்டது. இந்த விளம்பர வாழ்க்கை வெறுத்து விட்டது; எங்காவது மனித சஞ்சாரமில்லாத காடு, மலை தேடிப் போய் விடலாமென்று எண்ணினார். இரவோடு இரவாக மடத்தை விட்டு யாரும் பார்க்காமல் வெளியேறி விட்டார்.

பொழுது புலரும் சமயம் ஊரைத் தாண்டி வெகுதூரம் வந்து விட்டார். ஒரு கண்மாய்க் கரையோரமாக அவர் நடந்து சென்று கொண்டிருந்த போது, திடீரென்று யாரோ ஒரு பெண் 'சுவாமி! சுவாமி!' என்று கூவிக் கொண்டே பின்னால் ஓடி வருவதை அறிந்தார். இங்கேயும் நம்மைத் தொடர்ந்து ஆள்வந்து விட்டதே என்று அவர் ஓட ஆரம்பித்தார். ஆனால், 'சுவாமி! சுவாமி!' என்ற அந்தப் பெண் குரல் விடாமல் அவரைப் பின் தொடர்ந்து விரட்டிக் கொண்டு வந்தது. அந்தக் குரல் எங்கோ நெடுநாளைக்கு முன் கேட்ட மாதிரியாக இருந்தது.

சுவாமியார் நின்றார்.

அந்தப் பெண் நெருங்கி வந்தாள். அவர் அவளைக் கூர்ந்து நோக்கினார். 'ஆம்! அவளே தான்!' என்று மனத்திற்குள்ளே உறுதிப் படுத்திக் கொண்டார்.

'பெண்ணே! உனக்கு என்ன வேண்டும்?' சுவாமியார் கம்பீரமான குரலில் கேட்டார்.

'சுவாமி! எல்லோர்குறையும் தீர்த்து வைக்கிறீர்கள். அது போல் என் குறையையும் தீர்த்து வைக்க வேண்டுகிறேன்.'

'சொல்!'

'சுவாமி! ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால், என்மேல் உள்ள வருத்தத்தில் என் கணவர் வீட்டை விட்டுச் சொல்லாமல் போய் விட்டார். அவரை நான் திரும்பவும் அடைவேனா?' என்று கேட்டாள் அந்தப் பெண்.

'பெண்ணே! அவன் எதற்காக வீட்டை விட்டுப் போனான்?'

'சுவாமி ,நான் அடக்கமில்லாமல் நடந்து கொண்டேன். அவரை மதிக்காமல் இருந்தேன். அதனால் தான் போய் விட்டார்.'

'அவன் திரும்பிவந்தாலும் அப்படித் தானே நடந்து கொள்வாய்?', கம்பீரமான குரலில் சுவாமியார் கேட்டார்.

"இல்லை, சுவாமி! இப்போது நான் திருந்தி விட்டேன். இனிமேல் அவர் மனம் கோண நடக்கவே மாட்டேன். எப்படியும் அவர் எனக்குக்கிடைத்தால் போதும்!'

'உண்மையாகத்தான் பேசுகிறாயா?'

'சத்தியமாய், சுவாமி!'

'அப்படியானால், அவன் திரும்பி வந்து விடுவான்!'

'மெய்தானா? சுவாமி! எப்போது வருவார்? சொல்லுங்கள் சுவாமி!'— அவள் ஆவலுடன் கேட்டாள்.

'கற்பகம்! என்னை நீ தெரியவில்லையா? நான் தான் நீ தேடிக் கொண்டிக்கும் கருப்பையா!'—நிர்மலானந்த சுவாமிகளின் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வெளிப்பட்டன. சிறிது மாறிய குரலில். சுவாமியார் வாழ்க்கையில் வெறுப்படைத்த கருப்பையா திருந்தி விட்ட தன் மனைவி கற்பகத்தோடு மீண்டும் இல்லற வாழ்க்கை நடத்த முடிவு செய்து விட்டான்.

கற்பகம் அவனை உற்றுப்பார்த்தாள். சந்தேகமில்லை. தாடிக்கும் காவிக்கும் பின்னால் மறைந்திருந்தது கருப்பையாவின் உருவம் தான்.

அவள் முகத்தில் ஒரு சுளிப்பு! ஒரு நொடிப்பு!

"அடப்பாவி! உனக் கெத்தனை கொழுப்பு! ஊரிலே யிருக்க போம்பளையெல்லாம் உன் காலைத் தொட்டுக் கும்பிடவா இந்த வேஷம் போட்டே?" என்று பழைய அகங்காரக் குரலோடு கேட்டாள் கற்பகம்.

அவ்வளவுதான், கருப்பையாவுக்கு இல்லற வாழ்க்கையைப்பற்றிய எண்ணம் பறந்து போய்விட்டது. அங்கிருந்து ஒரே வேகமாகப் புறப்பட்டுவிட்டான், எப்போதும் நிர்மலானந்த சுவாமியாக இருக்கலாமென்று. கற்பகம் புலம்பிக்கொண்டிருந்தாள்! தன் அடங்காப்பிடாரித்தனத்தால் ஏற்பட்ட பலனை எண்ணி!

வெண்பாப் போட்டி-4.

★

'காய்' என்று தொடங்கிக்
'கனி' என்று முடிக்க வேண்டும்.

இறுதி நாள் 27-8-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

மல்லிகைப் பந்தல்

நாரா நாச்சியப்பன்

17. ராதா, ஒரு மேதை யானுளோ ?

புகைவண்டி வேகமாகப் போகும் போது பார்த்தால் பக்கவாட்டில் இருக்கின்ற மரங்கள் எல்லாம் வெகு வேகமாக வண்டிக்கு எதிர்ப்புறமாக ஓடுவதுபோல் தோன்றும். சற்று நிதானமாகத் தன் நினைவோடு கவனித்தால்தான், அவை ஓடவில்லை; வண்டி ஓடுவதால் அவ்வாறு தோன்றுகின்றன என்று அறியமுடியும். மனிதன் மன நிலைக்குத் தகுந்தபடிதான் இயற்கைப் பொருள்களின் தோற்றம் அமைகிறது.

கவலையாக இருக்கின்ற மனிதன் தேய்பிறை நிலவைக் காணும்போது, தன் சுகங்கள் தேய்ந்து வருவது போல அதுவும் தேய்ந்து வருவதாக எண்ணுகின்றன். வளர்பிறை நிலவைக் காணும்போதோ, தன் துன்பங்களைப் போல் அதுவும் வளருவதாகக் கற்பனை செய்கிறன். சிலர் மாறுபாடாக நினைப்பதுமுண்டு.

காதலன் தன்னேடு இருக்கின்ற போது குளிர்ந்த பாலொளி வீசும் நிலவைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்துகின்ற காதலி, அவனைப் பிரிந்திருக்கும் போது அது தன்னைச் சுடுவதாகக் கருதி வருந்துவதுண்டு.

நிலவும் மற்ற இயற்கைப் பொருள்களும் எப்போதும்போல்தான் இருக்கின்றன. அவற்றிற்கு இயற்கை விதித்த முறைப்படி சுழலுவதல்லாமல், வேறு வாழ்வும் தாழ்வும் சுகமும் துக்கமும் கிடையாது. ஆனல், மனிதன் தன் மன நிலைக்கு ஏற்ப அவற்றின் தோற்றத்தைத் தன் போக்குக்கு ஏற்ற முறையிலோ மாறுபட்ட நிலையிலோ இருப்பதாக எண்ணிக் கற்பனை செய்து கொள்ளுகிறன்.

தங்கம் வீட்டுத் தோட்டத்து மல்லிகையும் பூக்க வேண்டிய பருவத்தில் பூப்பதும, பூக்காத காலத்தில் பூக்காமலிருப்பதுமாகத் தன் இயற்கைப்படிதான் இருந்து வந்தது. ஆனல், அவள் அந்த மல்லிகைப் பந்தல் பூத்துக் குலுங்கிய காலத்திலெல்லாம் தான இன்பமாக இருந்ததாகவும், இப்போதுதான் அடிக்கடி மனக் குழப்பமடைந்து எப்போதும் கவலையாக இருப்பதைக் கண்டு அந்த மல்லிகைச் செடியும் பூக்காமல் இருப்பதாகவும் எண்ணி வருந்தினுள்.

பொதுவாக மக்கள் தாம் இன்பமாயிருக்கும்போது வேறு எதைப்பற்றியுமே எண்ணிப் பார்ப்பதில்லை, தங்களுக்கு ஏதாவது துயரம் வந்தால்தான் மற்றவர்களைப்பற்றியோ, மற்ற பொருள்களைப்பற்றியோ எண்ணிப் பார்ப்பது வழக்கம். இன்று உலகத்திலே மிகப் பெரிய மேதைகளென்றும் மகான்கள் என்றும் போற்றப்படுகிறவர்களெல்லாம், தாங்கள் ஒரு வகையான துன்பத்தை யடைந்தபோதுதான், தங்களைப்போல மற்ற மக்களுள்ளும் பலர் இவ்வாறு துன்பமடைபவர்களாக இருக்கிறர்கள் என்பதையுணர்ந்து அரும்பெரும் தொண்டு புரியத் தொடங்கியவர்களாக இருக்கக் காண்கிறேம்.

தங்கம் அப்போது அடைந்திருந்த துன்பமெல்லாம், வெறும் மனத்துயரம் தான். நாம் மிக எளிதாக வெறும் மனத்துயரம்தான் என்று கூறிவிடுகிறேம். ஆனல், அதை அனுபவித்த அவளைக் கேட்டால்தான் அதன் வலியும் சுமையும் எவ்வளவு என்பது புரியும்.

தங்கம் அந்த மல்லிகைப் பந்தலின் அடியில் இருந்தபடி எத்தனையோ விதவிதமான உணர்ச்சிகளுக்காளாகியிருக்கிறுள், எத்தனையோ மாதிரியான சிந்தனைகளில் ஈடுபட்டிருந்திருக்கிறுள். அத்தனைக்கும் அந்த மல்லிகைப் பந்தல் தன்னியல்பான சில மாறுதல்களை அடைந்ததல்லாமல் வேறு மாறுபாடு எதுவும் அடையாமல் அன்றிருந்தபடியேதான் இன்றும் இருந்தது. ஆனல், அது தன் மனம் போலவே வெறிச்சென்று இருப்பதாகக் கருதினுள் தங்கம்.

அவள், தன் அத்தான் சுந்தரேசனைக் கண்டது முதல் அவனிடம் தன் மனம் கொண்ட ஈடுபாட்டினை எண்ணியெண்ணிப் பார்த்தாள். அத்தான் சுந்தரேசன் தனக்காகவே பிறந்திருப்பதாகக்கூட அவள் எண்ணி மகிழ்ந்த சமயங்கள் எத்தனையோ இருந்தன. தன் மனம் அவனிடம் ஈடுபட்டது போலவே அவன் மனமும் தன்னிடம் வயப்பட்டிருப்பதாக அவள் எண்ணி இன்பமடைந்த நாட்கள் எத்தனையோ இருந்தன. ஆனல். இன்று அவ்வளவும் பொய்யாய், வெறுங் கனவாய்-கானல் நீராய்ப் போய்விட்டன என்பதை எண்ணிப் பார்க்கும்போது அவளால் அந்த உணர்ச்சியைத் தாங்கமுடியவில்லை.

அத்தான் சுந்தரேசன் தன்னை ஏமாற்றியதை நினைக்க நினைக்க அவளுக்குத் துன்பமாயிருந்தது. அவன்மீது பதிந்த தன் மனத்தை மீட்டுக்கொள்வதும் அவளுக்குக் கஷ்டமாயிருந்தது.

இப்போது அவனுக்கு ஒரு மனைவி இருக்கிறுள் என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகு அவனைப் பற்றி நினைப்பதில் அர்த்தமில்லை என்று அவள் மனம் வாதாடிக் கொண்டிருந்தது. ஆனல், அவனைப் பற்றி நினைக்காமல் அவளால் இருக்க முடியவில்லை. அவள் அவனை மறக்க முயன்ற போதெல்லாம், நடராசனுடைய உருவமும் அவள் முன்னே தோன்றியது. ஆனல், நடராசனுடைய ஒற்றைக் கையில் இருந்த ஊனத்தை நினைக்கும் போதெல்லாம் அவள் மனம் பின்னடைந்தது. அதுவுமல்லாமல், அந்த ஊனத்தை மறந்து அவனுடைய குண நலன்களையே சீர்தூக்கிப் பார்க்கின்ற போதும் அவள் மனம் நடராசனை ஏற்றுக்கொள்ளப் பின் வாங்கியது. ராதாவின் காதலன் அவன் என்பதை எண்ணும்போது அவனைப்பற்றித் தான் சிந்திக்க முற்படுவதே தவறு என்று அவளுக்குப் பட்டது.

இப்படி அவள் சுந்தரேசனையும் நடராசனையும் மாற்றி மாற்றித் தன் மனக் கண் முன்னே கொண்டு வந்து குழம்பிக் கொண்டிருந்தபோது, பின்னுலிருந்து யாரோ அவளுடைய கண்களைப் பொத்தினுர்கள்.

''என்ன விளையாட்டடி, ராதா !' என்று செல்லமாகக் கடிந்து கொண்டே அந்தக் கைகளைத் தன் கைகளினுல் விலக்கினுள் தங்கம். அந்தக் கைகள் முரடாயிருப்பதைக் கண்டு திகைப்படைந்து அவள் திரும்பிப் பார்த்தபோது அங்கே அவள் அத்தான் சுந்தரேசன் நின்று கொண்டிருந்தான்.

தங்கம் திடுக்கிட்டுப் பின்வாங்கி, 'அத்தான் நீங்களா?' என்று நடுங்கும் குரலோடு கேட்டாள்,

'ஏன் தங்கம் நடுங்குகிருய்? என்றுமில்லாமல் இன்று உன் உடம்புக்கு என்ன வந்துவிட்டது?' என்று கேட்டுக் கொண்டே, அவள் நெற்றியில் கை வைத்துப் பார்க்க முன்னுல் நெருங்கி வந்தான் சுந்தரேசன்.

தங்கம், மேலும் விலகி நின்று கொண்டாள்.

'அத்தான்! உடம்புக்கு ஒன்றுமில்லை. ஆனல், நீங்கள் என்னிடம் நடந்துகொள்ளும் முறைதான் நன்ருக இல்லை' என்ருள் தங்கம்.

'என்ன தங்கம் இப்படிப் பேசுகிருய்! என்றுமில்லாத மாதிரியாக இருக்கிறதே உன் பேச்சு! என் ஆருயிர்க் காதலி தங்கம் இப்படியா என்னிடம் பேசுகிருள்!' என்று தனக்குத் தானே பேசிக் கொள்ளுபவன் போல் நடித்தான் சுந்தரேசன்.

'அத்தான். இனிமேல் அந்த மாதிரி நீங்கள் பேச வேண்டாம். உங்கள் காதலை இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். உண்மையில் நீங்கள் என் மேல் அன்பு வைத்திருந்தால், உங்கள் மனைவியுடன் ஒற்றுமையாக வாழ முற்படுங்கள். அதுதான் நான் விரும்புவது!' என்ருள் தங்கம்.

'என்ன தங்கம் உளறுகிருய்! எனக்கா, மனைவியா? ஆம்! இனி மேல் நீதான் மனைவி! உன்னுடன் நான் ஒற்றுமையாக வாழாமலா போய் விடுவேன்.'' என்று மேலும் அருவருக்கத் தக்க முறையில் பேசினுன் சுந்தரேசன்.

''அத்தான் ! நீங்கள் என்னிடம் சொன்னதெல்லாம் சுத்தப் புளுகென்று தெரிந்து கொண்டு விட்டேன். இதோ உங்கள் மீனுட்சி வந்திருக்கிறுள். வாருங்கள் அவளிடம் உங்களை ஒப்படைத்து விடுகிறேன்.'' என்று அவன் கையை எட்டிப் பிடித்து வீட்டுப் பக்கமாக இழுத்தாள்.

'' தங்கம், நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே !'' என்று சுந்தரேசன் கூறிக்கொண்டிருந்தான்.

அப்போது, வீட்டின் கொல்லைப் பக்கக் கதவு வாசலில் மீனுட்சி தோன்றினுள். அவளைக் கண்டவுடனே சுந்தரேசன், தங்கத்தின் பிடியிலிருந்த தன் கையை உதறிக்கொண்டு வாசற் பக்கமாக ஓடிப் போய்விட்டான்.

மீனுட்சி விடுவிடுவென்று தோட்டத்திற்குள்ளே வந்தாள்,

தங்கத்தை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள்.

''அடி மானங்கெட்டவளே, உனக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால் என் கணவரோடு கை கோர்த்துக்கொண்டு உலாவியிருப்பாய் !'' என்று தங்கத்தைப் பார்த்துக் கடு நஞ்சுபோன்ற வார்த்தைகளை உதிர்த்தாள்.

''அக்கா, நடந்தது என்னவென்று தெரியாமல் நீங்கள் கோபப்படுகிறீர்

களே" என்று முதலில் அமைதியாகத் தான் மறுத்துரைத்தாள் தங்கம்.

ஆனால், மீனாட்சி அவளை வெறுப்போடு நோக்கிக் காதால் கேட்கமுடியாத வார்த்தைகளால் அர்ச்சனை புரிய ஆரம்பித்துவிட்டாள்.

அவள் தன்னை அவமதிப்பாகப் பேசப் பேசத் தங்கத்திற்கு உள்ளம் எரிமலையாய்க் குமுறியது. தான் அதுவரை அந்த மீனாட்சியைப்பற்றி மனத்திற்குள் அடக்கி வைத்திருந்த எண்ணத்தையெல்லாம் தங்கம் வெளிக் கக்கிவிட்டாள். கணவனோடு வாழத் தெரியாதவள் என்றுதான் கருதியிருந்ததைத் தங்கம் அப்படியே சொல்லி விட்டாள். உடனே மீனாட்சி அதைப் பெரிதுபடுத்தி, "எனக்குக் கணவனோடு வாழத் தெரியாவிட்டால், உன்னையா என் கணவனோடு வந்து வாழ்ந்து காட்டச் சொன்னேன்?" என்று கேட்டு இன்னும் பலவாறு பேசிவிட்டு, தோட்டத்திலிருந்தபடியே புறப்பட்டுப் போய் விட்டாள்.

அன்று முழுவதும் தங்கத்தின் இதயம் துடித்துக் கொண்டேயிருந்தது. வீட்டில் மீனாட்சி திடீரென்று புறப்பட்டுப் போய் விட்டதைப் பற்றிக் கேட்டபோது, தங்கம் ஏதோ சொல்லிச் சமாளித்துக் கொண்டாள். ஆனால், அந்த மீனாட்சி தன்னைக் கேட்ட ஒவ்வொரு வாசகத்தையும் நினைக்க நினைக்க அவளுக்கு அழுகையாக வந்தது. நல்லவர்கள் வாய்விட்டுச் சொல்ல அஞ்சும்படியான வார்த்தைகளால் அந்த மீனாட்சி தங்கத்தின் இதயத்தைக் கொத்திக் கொத்திப் புண்ணாக்கி விட்டுப் போய் விட்டாள்.

இன்பத்துக்கும் துன்பத்துக்கும் தன் இதய உணர்ச்சிகளோடு பங்கு கொள்ளக் கூடிய ஒரே ஒருத்தியான ராதாவின வீட்டுக்குத் தங்கம் சென்றாள். தனக்கும் மீனாட்சிக்கும் நடந்த வாக்கு வாதத்தையும், மீனாட்சி தன்னைப் பழித்துவிட்டுப் போனதையும் கூறிப் பொருமினாள் தங்கம்.

ராதா தங்கத்திற்காக, வருத்தப் பட்டாள். "நடந்தது சரி, வீட்டை விட்டு அவள் போனதும் நல்லது தான். இல்லாவிட்டால் நெடுக அவளுடன் மன்றாடிக்கொண்டு கிடக்க வேண்டும். அவளுடைய வார்த்தைகளை நீ பெரிதாக மதிக்க வேண்டாம்" என்று பலவாறு சொல்லி ஆறுதல் அளித்தாள் ராதா.

தங்கம் சுந்தரேசன் மீது காதல் கொண்டிருந்ததை அப்போதுதான் முதன் முதலில் அறிந்துகொண்ட ராதா, தங்கத்திற்காக மிகவும் பரிதாபப் பட்டாள். பாவம், கண் தெரியாத நிலையில்-கலியாணமான ஒருவனிடம் காதல் கொண்டு, அதில் தோல்வி கண்டு துயரப்பட்டுக்கொண்டிருக்கும் தங்கத்தைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பாவமாயிருந்தது.

தங்கம் இவ்வளவு நாளும் தன் உணர்ச்சிகளை மறைத்து வைத்திருந்தாலும், இன்று அவளுடைய காதல் வெறும் ஏமாற்றமாக முடிந்ததை எண்ணி அவளுக்காக இரக்கப்பட்ட ராதா அவள் உள்ளம் அமையும் முறையில் ஆறுதல் கூறித் தேற்றினாள்.

சுந்தரேசனை இனிமேல் மறந்துவிட வேண்டும் என்று ராதா யோசனை கூறினாள்.

"ராதா, நான் அவரை மறக்கத் தான் முயலுகிறேன். ஆனால், திரும்பத் திரும்ப அவருடைய நினைவு வந்து என்னை வாட்டுகிறது! காதல் என்பதே பொய்யென்றுதான் நான் எண்ணுகிறேன். ஆனால், அது என்னை இப்படித் துன்பப்படுத்துவதற்கென்றே தோன்றியுள்ளதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது!" என்றாள் தங்கம்.

"தங்கம், காதல் என்றும் பொய்யானதல்ல. ஒத்த பருவமும், ஒத்த குணமும். ஒத்த அன்பும் உடையவர்களிடம் ஏற்படுகின்ற காதல் எப்போதும் மறையாது. அவர்கள் மறைந்தாலும் அவர்கள் காதல் மறையாது. காவியங்களிலே காட்டப்படுகின்ற அந்த நிலையான காதல், வெறும் கற்பனையல்ல! அந்த உயிரான காதல் உண்மையில் உள்ளதுதான்! உண்மையில் நிகழ்ந்த காதலாக இருப்பதால் தான் அந்த உயர்ந்த காதல் காவியங்களிலே நிலையான இடத்தைப் பெற்று விட்டது. அழியக்கூடிய தன்மையுள்ளதாக இருந்திருந்தால்-அந்தக் காதலை-வெறும் மாயத் தோற்றமாக இருந்திருந்தால்-அந்தக் காதலை எந்தக் கவிஞனும் எடுத்துப் பாடியிருக்கமாட்டான். ஆனால், எல்லாருக்கும் எப்போதும் ஏற்படுகின்ற காதல் எல்லாம் உயிர் நிலையை அடைந்துவிடமுடியாது!" என்று ராதா பெரிய அறிவாளிபோல் பேசினாள்.

"உண்மைதான் ராதா, ஆனால் அந்த உயர்ந்த காதலுக்கும் நமக்கும் வெகு தூரம்" என்று சலிப்போடு பதில் சொன்னாள் தங்கம்.

"இல்லை, நல்லவர்கள் இதயத்தில் எழுகின்ற காதல் என்றும் நாசமடைவதில்லை. அந்தக் காதல் நிறைவேறினாலும், நிறைவேறாவிட்டாலும் அது அவர்கள் இதயத்திலும், வாழ்விலும் ஒளி வீசிக்கொண்டேயிருக்கும். அந்த ஒளியின் நிழலில் வாழும் காதலர்களின் இதயம் என்றும் அமைதியிலும் இன்பத்திலும் தோய்ந்திருக்கும்!" என்றாள் ராதா.

தங்கம் ராதா சொல்வது புரியாமல் அவளைத்தன் கண்களால் அகல விழித்து நோக்கினாள்.

'தங்கம்! ஓர் உயிர் மற்றோர் உயிரை நேசிக்கின்ற போது ஏற்படுகின்ற உணர்ச்சிக்குத் தான் காதல் என்று பெயர். ஆணும் பெண்ணுமாகிய இருவரிடையே ஏற்படும் இந்த அன்பைக் காதல் என்று நாம் சொல்லுகின்றோம். தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே ஏற்படும் இந்தஉயிருணர்வைப்பாசம்என்று சொல்லுகிறோம். நண்பர்களுக்கிடையே ஏற்படும் இந்த உணர்வை நட்பு என்கிறோம். எந்த நிலையில் எந்தப் பெயரோடு இருந்தாலும் இந்த அன்பு தன்னைக் கொண்டவர்களை இன்பத்துடன் இருக்கச் செய்யும் சக்தி வாய்ந்தது நேசிக்கும் இருவரிடையேயும் ஒத்த அன்பு இருந்தால் அதற்கு நிகரான ஆனந்தம் வேறில்லை என்பது உண்மை தான். இருந்தாலும் ஒருவரிடம் மட்டும் இந்த அன்பு இருந்தாலும் கூட அது இருவருக்கும் நலம் சேர்ப்பதும் இன்பம் உண்டாக்குவதும் உண்டு.

பெற்ற பிள்ளை அன்பு காட்டாவிட்டாலும் தாய் அவனைக் கடைசிவரை நேசிக்கிறாள். அவள் காட்டுகின்ற அன்பு என்றும் அழிவில்லாததாயிருக்கிறது. அவள் அன்பு ஒரு பக்க அன்பாக இருந்தாலும், அந்த அன்பால் பிள்ளை நலமாக இருப்பது கண்டு தாயும் இன்பமடைகிறாள், இவ்வாறு இருவருக்குமே நலமும் இன்பமும் பயக்கும் இயல்புடையது இந்த அன்பு.

ராதா இவ்வாறு சொல்லி வரும் போதே தங்கம் இடைமறித்தாள்.

'ராதா நீசொல்ல நினைப்பது என்னவென்று எனக்குப் புரிகிறது. தன் காதலுக்குரியவர் தன்னை உண்மையாகக் காதலிக்காவிட்டாலும், அவர் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும்-அவர் அடைகின்ற இன்பத்தையே தன் இன்பமாகக் கொள்ள வேண்டும், அவரோடு வாழ முடியாவிட்டாலும், அவர் நன்றாக வாழ வேண்டுமென்று எண்ண வேண்டும்—அவருடைய நல் வாழ்வு கண்டு ஆனந்தப் பட வேண்டும்—அப்போதுதான் தான் கொண்ட காதல் உண்மைக் காதல் என்று கருதலாம்—ராதா இதுதானே உன் கருத்து?' என்று கேட்டாள் தங்கம்.

'ஆம்! அன்பு என்பதே பிறர் நலம் கண்டு இன்பம்காணும் உணர்ச்சிதான். எவரிடத்தில் தன் அன்பு பாய்கிறதோ, அவர் இன்பங்கண்டு தானும் இன்பம் காண்பது தான்! என்றாள் ராதா.

அன்று, ராதாவிடம் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்பி வந்த தங்கம், ஒரு புதுப் பெண்ணாக வந்தாள் என்றே சொல்லலாம். தன் மனக்குழப்பங்களுக்கெல்லாம மருந்தருந்தி ஒரு தீர்வு கண்டு வந்த தங்கம் ராதாவின் பேச்சுக்களை எண்ணி எண்ணிப் பார்த்தாள். அப்போதெல்லாம், ராதாவிடம் இவ்வளவு அறிவுக் கருத்துக்கள் எங்கிருந்து வந்தன என்று அவள் மிகவும் ஆச்சரியப் பட்டாள். பட்டிக் காட்டுப் போக்கும், பழைய குருட்டு நம்பிக்கைகளும் ராதாவிடம் அதிகம் உண்டு என்பது தங்கத்திற்குத் தெரிந்த விஷயம், ஆனால், ஒரு பெரிய தத்துவமேதை போல அவள் பேசியதைத் தங்கம் அப்போது தான் முதன்முதலாகக் கண்டாள். ஒருவேளை, காதல் தன் வயப் பட்டவர்களை மேதைகளாய் ஆக்கிவிடக் கூடிய சக்தியுள்ளதாயிருக்குமோ? என்று கூட அவள் எண்ணினாள்.

வீட்டிலே இப்படிப்பல சிந்தனைகளிலே ஈடுபட்டிருந்ததங்கம், அண்ணாமலைப் பண்டிதரின் குரல் கேட்டு அவர் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தாள். மீனாட்சி போய் விட்டதைப் பற்றி அவர் எதுவும் கேட்பாரோ என்று தங்கம் எதிர் பார்த்தாள். ஆனால், மீனாட்சியை வீட்டிலே வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று முதலில் அம்மாவிடம் கூறிய பண்டிதர் இப்போது அவள் போனதைப் பற்றி இலட்சியப் படுத்திப் பேசவேயில்லை. ஒரு வேளை, எல்லாம் தெரிந்த அவர் மீனாட்சியின் குணத்தையும் தெரிந்துவைத்திருந்தாரோ என்னவோ?

அண்ணாமலைப் பண்டிதர், குரல் கேட்டதும் தங்கம் அவர் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவளை வரும்படி கையைக் காட்டி விட்டு அவர் சமையலறைக்குள்ளே நுழைந்தார்.

அங்கே மரகத அம்மாள் மோர் கடைந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். திரண்டு வரும் வெண்ணெயின் மீதே கண்ணாயிருந்த மரகத அம்மாள் அண்ணாமலைப் பண்டிதரின் குரல் கேட்டுத் திடுக்கென்று திரும்பிப் பார்த்தாள்.

'மரகதம்! முன்னெல்லாம், நான் கதலிப் பட்டணத்துக்குப் போனால், நடராசன் கூட வருவான். இப்போது நாளைக்கு நான் போய்வர வேண்டியிருக்கிறது! துணைக்கு ஓர் ஆளிருந்தால் நல்லது. தங்கத்தையும் என்னோடு அனுப்புகிறாயா?' என்று கேட்டார் அண்ணாமலைப் பண்டிதர்.

அண்ணாமலைப் பண்டிதர் சொல்லி மரகத அம்மாள் எதையும் மறுத்ததில்லை, அவளுக்கு ஏதோ அவரிடம் மதிப்பு இருந்தது. அதுமட்டுமல்ல அவரிடம் பயம் கலந்த ஓர் அன்பும் இருந்தது. அவள் அவரைத் தன் சொந்த அண்ணனைப்போல் மதித்துப் போற்றி வந்தாள்.

"இதோ தங்கத்தைக் கூப்பிட்டுச் சொல்லிவிடுகிறேன், அண்ணா!" என்றாள் மரகத அம்மாள்.

அதற்குள் தங்கமும் அடுக்களைக்குள் வந்துவிட்டாள்.

"தங்கம், நாளைக்கு அண்ணாவுடன் கதலிப்பட்டணம் போய் வருகிறாயா?" என்று கேட்டாள்.

மரகத அம்மாள் தன் மகளிடம் எப்பொழுதும் இப்படித்தான் அவளைக் கேட்பதுபோல் கட்டளையிடுவாள். தங்கமும் சரியென்று சொல்லுவதுதான் வழக்கம், வழக்கத்தை மீறி நடக்கவில்லை தங்கம்.

"போய் வருகிறேன் அம்மா!" என்று மலர்ந்த முகத்துடன் கூறினாள்.

"தங்கம், சும்மா வந்தால் போதாது. எனக்கு வண்டி ஓட்டிக்கொண்டு வர வேண்டும். தெரியுமா?" என்று கேட்டார் அண்ணாமலைப் பண்டிதர்.

ஏதோ விளையாட்டுக்குச் சொல்லுகிறார் என்றுதான் தாயும் மகளும் எண்ணினார்கள்.

ஆனால், மறுநாள் புறப்படும்போது தான் அவர் சொன்னது வேடிக்கையல்ல என்று தெரிந்தது.

மறுநாள் காலை சரியாக எட்டு மணிக்கு. முருகேச வாத்தியார் வழக்கமாக நடராசன் ஓட்டிக்கொண்டு வரும் ஜமீந்தார் வீட்டு மாட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தார்

வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றதைக் கண்டவுடனே, 'தங்கம்! தங்கம்!" என்று கூப்பிட்டுக் கொண்டே, அண்ணாமலைப் பண்டிதர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்.

தங்கம், குளித்து முழுகி புத்தாடை பூண்டு சீவிச் சடைப் பின்னிக் கொண்டு தயாராக இருந்தாள். மரகத அம்மாளிடம் சொல்லிக்கொண்டு அவள் வாசலுக்கு ஓடி வந்தாள்.

வண்டியை வாசலில் நிறுத்திய முருகேச வாத்தியார் அண்ணாமலைப் பண்டிதரைக் கண்டவுடன், "வண்டியைக் கொண்டு வந்துவிட்டேன். நான் போய் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டார்.

ஓட்டுவாரில்லாத அந்த வில் வண்டியில், ஏறிக்கொண்ட அண்ணாமலைப் பண்டிதர், தங்கத்தையும் ஏறிக்கொள்ளச் சொன்னார். அவள் வண்டியில் ஏறிப் பின்புறமாக உட்கார்ந்தாள்.

"தங்கம், முன்னால் வந்து வண்டியை ஓட்டு!" என்று கட்டளையிட்டார் அண்ணாமலைப் பண்டிதர். பண்டிதர் தன்னிடம் விளையாடுகிறார் என்றுதான் தங்கம் முதலில் எண்ணினாள். ஆனால், அவர் திரும்பத் திரும்பக் கண்டிப்பான குரலில் அவளே வண்டி யோட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார். தங்கத்திற்கோ வெட்கம் பிடுங்கித் தின்றது. மரகத அம்மாள் வேறு வாசலில் வந்து நின்றுகொண்டிருந்தாள். கந்தசாமி வாத்தியார் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்த படியால் அங்கு வழியனுப்ப வரவில்லை.

கடைசியாகத் தங்கம் வண்டியின் முன்புறத்திற்கு வந்து சேர்ந்தாள். கயிற்றையும் கையில் பிடித்தாள்.

"சும்மா வெட்கப்படாதே! தட்டி ஓட்டு! நாளைக்குக் காரோட்ட வேண்டிய கையல்லவா!" என்று சொல்லிச் சிரித்தார் பண்டிதர்.

தங்கம். எப்படியோ, தன் வெட்கத்தையெல்லாம் மறைத்துக்கொண்டு ஹே! ஹே! என்று மாடுகளைத் தட்டி விட்டாள்.

தொடரும்

நூல் நயம்

வளரும் தமிழ்

ஆசிரியர்: பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை எம். ஏ., எல். டி., (விசாரத்) வெளியிட்டோர்: அலமேலு நிலையம் சென்னை-5. விற்பனையுரிமை: முத்து புத்தக நிலையம், மேல அரண்சாலை, திருச்சி - 2. விலை ரு 3-00.

'வளரும் தமிழ்' என்ற புத்தகத் தலைப்பைக் கண்டவுடன், தற்காலத் தமிழ்நடை, இலக்கியம் ஆகியவை பற்றிய கருத்துரை நல்கும் நூலாயிருக்கும் என்ற எண்ணத்துடன் தான் இந்த நூலைப் பிரிக்கத் தோன்றுகிறது. ஆனல் பார்த்தால், நூல் முழுவதும் பழந்தமிழ் பற்றிப் பேசுவதாகவே காணப்படுகிறது. என்ருலும், இடையிடையே ஒரு சில இடங்களில தற்காலத் தமிழ் நிலையை ஆசிரியர் தொட்டுக் காட்டிப் போகின்ருர்.

வளருந்தமிழ் என்ற முதல் கட்டுரையில் ஆசிரியர், "பனிரெண்டாம் நூற்ருண்டில் தமிழ்நாட்டினுள்ளேயே பாண்டித்தமிழ், சோழத் தமிழ் என்ற வேறுபாடு தலை காட்டிற்று இரண்டுக்கும் வெவ்வேறு எழுத்துக்கள்கூட ஏற்பட்டன. இன்றையத் தமிழ் எழுத்து சோழ எழுத்தேயாகும். இது சேர எழுத்து எனவும் கூறப்பட்டது" என்ற கருத்தொன்றைத் தெரிவிக்கிருர். இது பற்றி மேலும் விரிவான விளக்கங்களுடன் ஆசிரியர் எழுதுவாராஞல் பயன் உண்டென்று கருதுகின்ருேம்.

மற்றும் ஒரு கட்டுரையில் "நம் தமிழ்நாட்டில் ஆங்கிலம் ஒன்று நீங்கலாக எந்தப் பிறமொழியும் தாய் மொழியைவிட எத்துறையிலும் சிறப்புடையதன்று" என்று தம் கருத்தைத் தெரிவிக்கிருர் ஆசிரியர், இது தமிழைக் காட்டிலும் ஆங்கிலம் உயர்ந்தது என்ற தவருன கருத்தை நாட்டிலே பரப்பத்துணையாகி விடுமோ என்று அஞ்சுகின்ருேம். ஆங்கிலம் பயன் தரும் மொழியாக இருப்பதனுல் அது உயர்ந்த மொழியாகி விடாது என்பதே நம் கருத்து

இன்று தமிழ்நாட்டிலே ஒரு சில தீயவர்களால் எல்லாத் தமிழ் நூல்களும் வடமொழியிலிருந்தே வந்தன என்ற கொள்கை பரப்பப்பட்டு வருகிறது. ஆசிரியர் அவர்கள், "தமிழகமும் தமிழர் சமய வாழ்வும்" என்ற கட்டுரையில் இந்தத் தீயவர்களின் கருத்துக்களைத் தவிடுபொடியாக்குகிருர்.

"தமிழின் பல நூல்கள் வடமொழி பிறப்பதற்கே முந்திய நூல்களாயிருக்கக்கூடும்."

"தமிழர் பெருமையை ஏற்று எல்லா நாட்டினருமே கடன் பெறத் தயங்கியதில்லை. ஆனுல், இக்கடன்கள் மறக்கப்பட்டன, இன்றும் மறைக்கப்படுகின்றன."

"வடமொழி தேவமொழி என்ற கருத்து கம்பர் காலத்துக்குமுன் தமிழிலும் இல்லை, வடமொழியிலும் இல்லை."

இவைபோன்ற தெளிந்த கருத்துக்களைக் கொடுத்து ஆசிரியர் தமிழர்களின் மனத்தில் ஒரு தன்னம்பிக்கை ஏற்பட வகை செய்கிருர்.

தமிழ்ச் சொற்களும் தமிழ்ப் பண்பாடும் என்ற கட்டுரையில், சொற்களைக் கொண்டே தமிழர் பழம் பண்பாட்டை அழகுற எடுத்து விளக்குகிருர் ஆசிரியர்,

வடசொற்களென மயங்க இடந்தரும் பல சொற்கள் நல்ல தமிழ்ச் சொற்கள் என்பதை ஆசிரியர் மிகவும் எளிதாகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டுகிருர்.

சில ஆண்டுகளுக்கு முன்னல், தமிழை ரோமன் எழுத்தில் எழுதலாம் என்ற ஒரு தவருன கருத்து ஒரு சிலரால் பரப்பப்பட்டு வந்தது. அந்தத் தவருன கருத்தை எழுத்துச் சீர்திருத்த முறைகள் என்ற கட்டுரையில் ஆசிரியர் விளக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார். பொதுவாக இந்த நூல் பழந்தமிழைப் பற்றி நாம் கொண்டுள்ள பல ஐயங்களைத் தெளிவிக்கவல்லதாயிருக்கிறது.

தொன்றுதொட்டுச் சிறப்புடன் விளங்கிவரும் நம் தமிழில் ஒன்றுமில்லை என்று சொல்லியும். நிலைநாட்ட முயன்றும் வருகின்ற தமிழ்ப் பகைவர்களின் கருத்தை நோக்கத்தை-குறிக்கோளை முறியடிக்க ஒரு நல்ல கருவி இந்த நூலென்று சொல்லுவோம் தமிழர்கள் தங்கள் தமிழின் பழம் பெருமையையும் அருமையையும் நிறையையும் வளத்தையும் அறிந்துணரச் செய்யும் ஓர் அரிய நூல் இதுவென்றே கூறுவோம்.

பல கட்டுரைகளின் தொகுப்பான இந்த நூலை இவ்வளவு அழகாக வெளியிட்டவர்கள், பொருளடக்கம் என்ற ஒரு பகுதியைச் சேர்க்காமல் போனது பெருங்குறையாகும். பொருளடக்கம் இருந்தால், வாசகர்கள் தங்களுக்குத் தேவையான குறிப்பைத் தேடுவது மிகவும் எளிதாக இருக்கும்.

அறிஞர் அப்பாத்துரையார் பன்னெடுங் காலமாகத் தமிழுக்காகவும், தமிழ் உயர்வுக்காகவும் வாழுகின்றவர். பல மொழிகளையும் கற்றுத் தெரிந்து, பழந்தமிழ் நூல்களையும் ஆய்ந்தாய்ந்து தமிழ்ச் சிறப்பை ஆராய்ச்சி ஆதாரங்களுடன் எழுதி வருகின்றவர். அவருடைய கருத்துக்கள் ஒவ்வொன்றும் தமிழர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒவ்வொரு படைக்கலன்கள் என்றே கூற வேண்டும். அப்படிப்பட்ட நூல்களிலே 'வளரும் தமிழ்' நூலும் ஒன்று என்று கூற விரும்புகிருேம்.

திருமண அழைப்பு

அன்புடையீர்!

வணக்கம், நிகழும் (26-8-60) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில், பெங்களூர், உயர் திரு. பி. தாமோதரம் (பாசிங் ஆபிசர், மைசூர் பாங்கு) அவர்களின் மகள், **செல்வி. சுலோச்சனுவை. அறிஞர் அண்ணு** அவர்கள் தலைமையில் சென்னை, புரசைவாக்கம் 'ஆலத்தூர் வில்லா'வில் (495, பூந்தமல்லி நெடுஞ்சாலை) வாழ்க்கைத்துணைவியாக நான் ஏற்கும் பதிவுத் திருமண விழாவிற்கு வந்திருந்து வாழ்த்திச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்;

டி. கே. பொன்னுவேலு,

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

..."அதை (இந்தியை) மத்திய அரசாங்க மொழியாக்கக்கூடாது என்பதில், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்களிடையே கருத்து வேறுபாடில்லை.

அந்த மொழிக்கு அவசரப்பட்டு அந்த உயரிய அந்தஸ்து அளிப்பதோ, அந்த மொழியைக் கற்கக் கட்டாயப்படுத்துவதோ, மற்ற மொழியினருக்கு ஒரு கொடிய அநீதி. இந்த உணர்வுடனேயே பிரதம மந்திரி நேரு இவ்விஷயத்தில் மற்ற மொழியியினருக்குள்ள அச்சத்தை நீக்கும் பொருட்டு ஒரு திட்டமான உறுதிமொழி கொடுத்தார்.

இந்தி பேசாத மக்களின் சம்மதமின்றி அம்மொழி, மத்திய அரசாங்க மொழி ஆக்கப்படமாட்டாது என்பதே அதன் கருத்து

ஆனல், பின்னர். ஜனதிபதி சர்க்கார் சார்பில் விடுத்த அறிக்கை, அந்த உறுதிமொழிக்கு ஒத்ததாயில்லை. அவசரப்பட்டு இந்தியைப் புகுத்தும் ஒரு மனோபாவத்துடனேயே அவ்வறிக்கை அமைந்திருக்கிறது"

இவை, சுதேசமித்திரனில் காணப்படுபவை. இது, இப்படி இருக்கக் குடியாட்சித் தலைவர் தமது ஆணையில் நேருவின் உறுதிமொழியை ஆதரித்திருக்கிருர் என்று, டில்லியிலிருந்து நேருவும், பந்துவும். ஆரவாரம் செய்வதும், சென்னை மணியமும் அதற்கேற்பத் தாளம் போடுவதும் ஏன்?

நாம், எவ்வளவு பித்தலாட்டக்காரர்கள், எத்தனை பெரிய பொறுப்பில்-எவ்வளவு மக்களின் வாழ்வில், தொடர்பு கொண்டிருக்கிருர்கள் என்று நினைக்கும்போது, நமக்கு நெஞ்சு நடுங்குகிறது!

தமிழ்நாட்டு வறுமையும், அதன் அரசியல் அறியாமையும் கொடுத்த பேராதரவால், சென்னை முதல் அமைச்சராக நெடிது வீற்றிருக்கும் திரு. காமராசர் இந்தி பற்றிய பிரச்னையை, சென்னை சட்டமன்றத்தில் பேசிக்கொள்ளலாம், என்று, நெல்லை மாவட்டத்தில் இருந்து முழங்கினுர். அதே நேரத்தில் நாங்கள் 150 தி. மு. க. 15 என்பதையும் சொல்லத் தவறவில்லை! கெட்டித்த துப்பாக்கிகளையும் நினைவுபடுத்தினுர்! என்னே அறிவுடைமை! இந்தி ஆதிக்கம் பற்றிய சென்னை சட்டமன்றத் தீர்ப்பு எத்தகையதாக இருக்கும்? இத்தகையவர்கள் உதவியால்!

காமராசர்களுக்கு எஜமானர்களாக இருப்பவர்களை, சென்னையின் நலத்திற்காக என்று, எப்போதாவது காமராசர்கள் தட்டிக் கேட்டதாக சரித்திரம் உண்டா? 'ததாஸ்து' என்றதைத் தவிர!.

"என்ன இருந்தாலும் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக்கொடி காட்டலாமா?"

கூடாது! ஆகாது! அவர் கட்சிகளுக்கு அப்பால் பட்டவர். எல்லாருக்கும் பொதுவானவர் என்று "சுதேசமித்திரன்" "தமிழ்நாடு" போன்ற சில பத்திரிகைகளும், சமரச நோக்கமுடையவர் என்று தமக்குத் தானே 'கித்தாப்பு' கற்பித்துக்கொண்டிருக்கும் அப்பாவிகள் சிலரும் கதைக்கின்றனர்.

ஜப்பானுக்கு ஐசனேவர் வரலாகாதென்று அங்குள்ளோர் கிளர்ச்சி செய்து வெற்றி கண்டதை அண்ணு 31-7-60 ம் நாள் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் குறிப்பிட்டார்.

அதனைச் சுட்டிக்காட்டத் தொடங்கிய காமராசர்:

"ஐசனேவர் அந்நியக் குடியரசுத் தலைவர். அவரை வரவேண்டாம் என்றது ஜப்பானியர்களுக்கு நியாயம் தான். இராசேந்திரர் நமது குடிரசுத் தலைவர் அல்லவா? அவருக்கு கறுப்புக்கொடி காட்டலாமா?" கூடாது! என்கிருர்.

திராவிட மக்கள் அறியாமையில் இருந்த நேரத்தில், ஆங்கிலேயனுடைய அக்கிரமத்தைத் துணையாக்கி, திராவிடத்தை இந்திய யூனியனில் இணைத்துக்கொண்டதால், வடநாட்டுக் குடியரசுத்தலைவர் திராவிடத்திற்கும் குடியரசுத்தலைவர் ஆகிவிட முடியுமா?

திராவிடம் தனி ஒரு நாடு. இந்தியா என்பது ஒரு நாடல்ல - துணைக் கண்டம். அதிலும், சிறப்பாக உணவால், உடையால், மொழியால் பழக்க வழக்கங்களால், பண்பாட்டால், நாகரிகத்தால், பண்டைச் சரித்திரங்களால், நெடுங்கால இன்ப துன்பங்களால், தட்பவெப்பங்களால், பழம் பெரும் அரசாட்சி முறைகளால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நின்று நிலைத்த மனநம்பிக்கைகளால், ஏற்கனவே நடந்த போராட்டங்களால் பொருளாதார மூலங்களால் இப்படி, எல்லா வகையிலும் திராவிடம் வடவர்களோடு முரண்பட்ட தனி ஒரு நாடு என்பதை எவருக்காவது மறுக்கும் திறன் உண்டா?

அப்படிப்பட்ட ஒரு நாட்டுக்கு ஐசனேவர் எவ்வளவு உரியவனே, அவ்வளவு உரியவர்தான் இராசேந்திரரும்! இதை, காமராசர்தான் உணரமுடியாதவர் என்ருல், பழம் பெரும் பத்திரிகை நடத்துவோருமா உணர முடியவில்லை!

உரிமையைப் பற்றிப் பேச்செடுத்தால், 150-15 என்கிற இடத்துக்கு வருவார்கள் என்பது நமக்குத் தெரியும்! இந்த 150 இன்னும் எத்தனை நாளைக்கு?

ஆங்கிலேய இளவரசன் வேல்ஸ் இந்தியாவிற்கு வருகை தந்தபோது, இந்தியா, ஆதிக்க உரிமைப்படி அவனுடைய நாடாகத்தான் இருந்தது. அப்போது, இன்றைய வக்கிர வாதம் பேசும் காங்கிரஸ், இன்றுள்ள தி. மு. கவைவிட மிகச்சிறு இயக்கமாக இருந்தது. அந்த நேரத்தில், அதற்கு, நாட்டுமக்களிடம் வெறுப்பும் ஆங்கிலேய ஆட்சிக்கு ஆதரவும் இருந்தது.

அப்படிப்பட்ட நிலைமையில்தான், வேல்ஸ் இளவரசனுக்குக் கறுப்புக் கொடி வரவேற்பு நடத்தினுர்கள் காங்கிரஸ்காரர்கள்.

ஆட்சிக்குப் பேராதரவு இருந்த காரணம் ஒன்றினுலேயே, இந்தியா ஆங்கிலேயனுக்கு உரிமையுடையதாக முடியுமா? ஆங்கிலேயன் 150-15 என்று பேசமுடியுமா?

வேல்ஸ் இளவரசன் இந்தியாவுக்கு எவ்வளவு உரிமையுள்ளவனே, அவ்வளவு உரிமை திரு. இராசேந்திரருக்கும் திராவிடத்தில் உண்டு.

இதனுல், திரு. இராசேந்திரர் திராவிடத்தின் குடியரசுத் தலைவர் ஆகமுடியாது.

என்றைக்குமே காமராசர் 150 ஆகவும் அண்ணு 15 ஆகவும் இருக்கப்போவதில்லை. காற்று திசை மாறும் - திசை மாறிக்கொண்டிருக்கிறது.

★ புதுப் பொலிவோடு

★ புரட்சி முரசறைய...

ஆகஸ்டு 20-ல் வெளிவருகிறது

'போர் வாள்'

(மாத மும்முறை)

ஆசிரியர்: A. K. வில்வம்

எங்கும் விற்பனையாளர் தேவை

17, ஒயிட்ஸ்ரோடு, சென்னை-14.

உ. குறள் நெறி

"குறளைப் பறையறைந்து குமரித் தமிழ் வளர்ப்போம்" என்று கொண்ட கொள்கையை விடாது தொண்டாற்றும் மன்றங்கள் பலஉண்டு வள்ளுவரைத் துணைக்கழைத்து வாழ்வை வளப்படுத்தியவர்கள் எல்லாத் துறைகளிலும் உண்டு. 'குறள் விழா' நடத்துவது இன்றைய நாகரிகங்களில் ஒன்று. விழாவை ஒவ்வோர் ஆண்டிலும் நடத்தி விளக்கவுரையாற்றிக் கலைந்து செல்வர் மக்கள். வள்ளுவப் பெருந்தகை குறளை ஆக்கியதன் உட்பொருளே இங்குப் பேணப்படவில்லை என்பது வருந்தத்தக்கது.

'குறள் மன்றம்'-தலைவர்-செயலாளர்-செயற்குழு உறுப்பினர்கள் (வேண்டியவர்கள் மட்டும்)-தொடக்க விழா-பெரும் பேராசிரியர் சொற்பொழிவு, முதலாண்டு முடிவு; ஆண்டு விழா-விழாச் சொற்பொழிவாற்ற விரிவுரையாளர்-பெருங் கூட்டம்-விழா இனிது முடிந்தது-மலர் வெளியீடு? இவ்வாறு பல மன்றங்கள் பொதுப்பணி எதுவுமே செய்யாமல் வள்ளுவர் பெயரைப் பயன்படுத்தி வாழ்க்கை நடத்துகின்றன. இம் மன்றங்களின் பின்னல் மனிதர்கள் சிலர் விளம்பரம் பெறுகின்றனர்.

குறளும் குறட்கருத்தும் கொஞ்சமும் தெரியாதவர்-தலைவர்! தெரிந்த நண்பர் கண்டு 'யாரிடமாவது குறளைப் பாடம் கேட்டுக் கொள்ளுங்கள், நீங்கள் குறள் மன்றத் தலைவர் என்பதால் சொல்கிறேன்' என்ற விளக்கமும் தருவார். அந்தத் தலைவரோ அரசியல் மேதை போல், எனக்குப் போதிய நேரம் இல்லையே?' என்று குறைப் பட்டுக் கொள்வார். அப்படி என்ன வேலை என்று ஆராய்ந்தால், படிப்பும் இல்லை, பொறுப்பான பணியும் இல்லை என்பது தெரியவரும். காசைக்கொண்டு காசு பெருக்கும் பெரும் பணியைக் காலை முதல் 'மாலை' வரை நோவாமல் செய்கிறார். இத்தகு தலைவர் எவ்வாறு 'செல்வத்துட் செல்வம் கல்வி' என்பதை உணர முடியும்? வெளிப்பகட்டில் விளம்பரம் பெறுவதற்கு விழாவும் தலைவர் பொறுப்பும் தமிழகத்தில் பெருகி விட்ட நோயாகி விட்டன.

குறள் நெறி என்றவுடன் வழக்கம் போல் இரண்டொரு பக்கங்களில் நான் கைந்து குறள்களுக்கு உரை எழுதுவது என்று மட்டும் கருதிவிட வேண்டாம். உண்மையில் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பல பொன்னான செய்திகளிற்சில உங்களின் சிந்தனைக்கு விருந்தாகத் தருவதே என் நோக்கம்.

'விலைவாசிகள் ஏறிவிட்டன-உணவுப் பொருள்களின் அடக்க விலையும் அளவுக்கு மேல் உயர்ந்து விட்டன' என்று இன்று மக்கள் வருந்தவும்-மக்கள் மன்றத்தில் உறுப்பினர்கள் குறைகூறவும் காண்கிறோம். இந்த நிலை நீடித்தால் ஏழை மக்கள்தான் உணவின்றி வருந்த நேரிடும். அவ்வாறு வறுமை நிலை வளர்ந்தால் ஆளும் அரசிற்கு அது பெரும்சுமை என்பதோடு தொடர்ந்து ஆட்சி செலுத்த முடியாது என்பதை வள்ளுவர் மட்டும் கூறவில்லை. நேற்று வாழ்ந்த, ஆளுவோர் போற்றும் அமர கவி பாரதியும் பாடிச் சென்று விட்டான்.

'தனி ஒருவனுக்கு உணவில்லை
யெனில் சகத்தினை அழித்திடு
வோம்'—

விலை அளவிறந்து உயர்ந்தால் தனி மனிதனுக்கு உணவு கிடைக்குமா?

'கூழுக்கு அழும்படி செய்திடும்
கோல்தனை ஒடித்திடுவோம்.'

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் நேரடியாகவே அரசைத் தட்டிக் கேட்கிறார்.

ஆனால் வள்ளுவரோ அரசு-மக்கள் இவற்றிற்கு ஆதியாகக் கருதும் உலகைப் படைத்தவனையே ஓங்கிக் குரல் எழுப்பிக் கேட்கிறார்.

'இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.'

இக்குறள் மூலம் இறைவனையே வழக்கு மன்றத்தில் நிறுத்தாமல் தண்டனை தருகிறார் வள்ளுவர். ஆனால் இந்நெறியை உணராமல் ஆளுபவர்கள் தமிழ் வளர்ச்சியில் கருத்துச் செலுத்துவதாகக் கூறுகின்றனர். உணவு நிலை மனநிறைவு அளிக்கா விட்டால் 'ஆண்டவனே கெடுக' என்று ஆன்ற புலவர் கூறுவதால், ஆளும் மனிதர்கள் நிலை என்னவாகும் என்பதை நாமே எளிதில் அறியலாமே! வறுமைத் துன்பம் கொடிது என்பதை வறுமை பட்டவரே அறிய முடியும். அதன் விளைவு எப்படிப் பட்டது என்பதை 'கோல்தனை ஒடித்திடுவோம்' என்ற சொற்கள் எளிதிற் புலனுக்கும். இதை உணர மறுப்பவர் குறள்நெறி புரியாதோர் என்பது வெள்ளிடைமலை.

குறள் நெறி வாழ்வு எவ்வளவு உயர்ந்தது என்பதையும் அறிதல் மங்கையர் மாண்புக்கு உகந்ததாகும். இன்றைய தமிழகம் தலைதூக்கி நிற்பதற்கு உரிய, உரிமை உணர்ச்சி இன்னும் முழுமை பெறவில்லை என்பதே. உரிமை உணர்வு இல்லா நாடோ, இனமோ முன்னேற முடியாது. நாட்டை நம் நாடாக்கும் முயற்சி-பொறுப்பு மகளிர்க்கும் உண்டு. ஆளப்படும் இனத்தை ஆளும் இனமாக மாற்றியமைக்க மகளிர் முயலுதல் வேண்டும். இந்த உண்மையை வள்ளுவர் நன்குணர்ந்தார். கடலிற் செல்லும் மாலுமிக்குக் கலங்கரை விளக்கம்போல, 'குடும்பம்' என்னும் படகினை ஓட்டும் தலைவனுக்குத் தலைவி ஒளி காட்டுபவளாவாள். இதனாலன்றோ "மகளிர் நலம்" என்னாது 'வாழ்க்கைத் துணைநலம்" என்றார். வள்ளுவர்.

ஆடவன் அஞ்சாதவன்; அவனுக்கா துணை ? தன் தோள் வலியும் வாள் வலியும் கேட்டோரே தோற்றார் என்ற பெருமை படைத்த தமிழ் மறவனுக்குத் துணையா ? தமிழா ! உனக்கு உன் வீரம்தான் துணை, பிற துணையை நினையாதே ! என்று கூறாது, இயற்கையிலேயே அச்சம் மிகுந்தவராய்க் கருதப்படும் மகளிரை ஏன் வாழ்க்கைத் துணை என்றார் ? வள்ளுவர் மொழியும் ஒவ்வொரு சொல்லும் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற தொல்காப்பிய இலக்கண வழிப்பட்டதாகும்.

ஆண் மகனின் வீரம் பெண் துணையால் இழுக்குப்படும் என்று கருதுவோரும் உண்டு. இங்குத்தான் வள்ளுவரின் வலிமையை ஆய்வுள்ள அறிவைக் காண்கிறோம். கவிமணி அவர்கள் "மங்கையராகப் பிறந்திடவே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்று கூறியதன் சிறப்பு வள்ளுவர் வழி வந்ததேயாகும்.

தலைவனின் வருவாய் அறிந்து வாழ்க்கை நடாத்தாவிட்டால் வறுமைப் படுகுழியில் வழுக்கி விழுந்து வாழ்க்கை முழுதும் துன்பப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கேற்ற ஆற்றல் தலைவிக்கு, தலைவிக்கே வேண்டும்; அவள்தான் பெண் என்பதோடு, துணைக்கு ஏற்றவள் என்றும் குறிக்கிறார்.

இவ்வாறு வருவாய் அறிந்து வாழ்க்கை நடத்த வேண்டிய நிலை உடையவர் மற்றொருவர் உண்டு. அவர்தான் நிதி அமைச்சர். இன்றைய பொருளாதார வல்லுநர்கள்கூட வியக்கலாம் ! வாழ்க்கைத்தரம் (விலை,) உயர்கிறது; சம்பள உயர்வு வேண்டும்" என்று அரசியல் அலுவலர் முதல் அவதியுறும் தொழிலாளர்வரை தொடர்ந்து கூறுவதைக் கேட்கிறோம் காரணம் என்ன ?

பெற்ற பொருளுக்கேற்ற வாழ்க்கை முறை இல்லை என்பதும் ஒரு காரணம் (இதனையே முழுக் காரணமாகக் கொள்ளுதல் பொருந்தாது. ஏனெனில் நாளுக்கு நாள் உணவுப் பண்டம் விலை ஏறுமானல் நாட்டின் ஆட்சியில் கோணல் என்பதைத் தவிர, இங்குத் தலைவி ஒன்றும் செய்ய இயலாது) அடுத்த வீட்டுப் பெண்ணின் ஆடம்பர வாழ்வு தனக்கு இல்லையே என்ற ஏக்கமும் பெண்ணைப் பெண்ணுக்காமல் பேயாக்கும். இதனால் குடும்ப வாழ்வு சீர்படாமல் குலைவதோடு, அன்பு அழிகின்றது. இதனையே அன்றுணர்ந்த வள்ளுவர் "வருவாய்க்கு ஏற்ற வாழ்வு" வேண்டும் எனறார்.

உணவுப் பொருள் கிடைக்க வகையின்றி, மக்கள் வறிஞராய் வாழ்வு நடாத்தத் தொடங்கினல் கொற்றவன் குடி பழி தூற்றும் கோலோனய்க் காடு ஏகுதல் பண்டைய நிலை இதற்குரிய காரணம்.

"அறிகொன் றறியான்
எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல்
கடன்"

என்பதை மறந்து, எண்ணித்துணியும் ஆற்றலின்றி, ஆளுபவனை நல்வழிப் படுத்தத் தவறிய அமைச்சனே காரணமானவன். நாகரிகம் மிகுந்த மக்களாட்சியிலே நிதியமைச்சு நாட்டின் வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்துப் பாராளுமன்றத்தில் படைப்பதைக் காண்கிறோம். அத்திட்டம் நாட்டு நிலைக்கேற்ப-வரவிற்கேற்ப அமைதல் வேண்டும். இன்றேல் முதலமைச்சர் முதல் உறுப்பினர்வரை பதவி இழக்கவும் எதிர்க் கட்சியிலுள்ளோர் அரசு கட்டில் ஏறவும் நேரிடும் என்பது வரலாறு காட்டும் உண்மை. நாட்டாட்சியில் காணும் நிகழ்ச்சியைத்தான் வள்ளுவப் பெருந்தகை "வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என வீட்டாட்சியில் பொருத்திக் காட்டினர்

குறள் நெறி அறிந்து நடப்போர் அறவழி வாழ்வில் இன்பம் அடைதல் உறுதி. திருக்குறள் வெறும் அறநூல் என்றும்மட்டும் எண்ணுவது பொருந்துவதன்று. அறத்தோடு கலையையும், கலையோடு பல்வகை அறிவியல் துறைகளையும்-இலக்கணத் துறைகளையும் தன்னகத்தே கொண்ட ஓர் அறிவியல் நிலையம் ஆகும். அவ்வறிவியல் வழி நின்றார் நம் செந்தமிழ் நாட்டார். அவர் வழி நாம் நின்று அழியாப் புகழைப் பெற்று-இழந்ததாய்த் திருநாட்டைப் பெற்று இனிது வாழ்வோமாக.

அடுத்த கிழமை-புறவாழ்வு நெறி.

"சாதி மத வெறி யானை"

[இளஞ்சிற்பி]

நச்சரவை உள்வீட்டில் நடமாட விட்டு
நாமுமதில் வாழ்ந்திருந்தால் நலிவேதான்; சாதிச்
சச்சரவைத் தாழ்வுயர்வைச் சந்தனமாய்ப் பூசின்
சாக்காடே மிஞ்சுமெனச் சாற்றுதல்பொய் யோடா?

விளைபயிரில் 'மத'யானை விளையாடி நின்றால்
வீணாகும் விளைவென்று விளம்பிடவும் வேண்டும்?
கிளைகளிலே புல்லுருவி கிடந்தாலத் தருவே
கேடுறல்போல் மதவெறியால் கெடும்மாந்த ரினமே!

வேண்டாத வேற்றுமைகள் விளைக்கின்ற 'சாதி
வெறி'கொண்ட பிரிவுண்டு வேதத்தில்; பார்ப்பான்
ஆண்டான்வா ணிகம்செய்வோன் அடிமைஎன் பார்கள்
அவ்வவர்க்கும் தனித்தனியே அறைவார்கள் நீதி.

ஒருகுலத்திற் கொருநீதி உரைக்கின்ற நூல்கள்
ஒற்றுமையை வையத்தில் உருவாக்கு மோடா?
ஒருகுலமே உண்டென்றார் உணர்ந்தோர்;புல் லாளர்
உயர்வென்றும் தாழ்வென்றும் உளறல்என் னேடா?

பிறப்பொக்கும் உயிர்க்கெல்லாம் பேதமிலை என்றே
பிறங்குதிருக் குறளறிவு பெற்றசில ருண்மை
மறக்கின்றார்; மறைக்கின்றார், மனமில்லார் 'சாதி
மத'ங்கொண்டு திரிகின்றார் மாண்டவர்தா னேடா?

ஆதியிலே சாதியிலை அறிவாய்! சங் கத்தில்
அரும்புலவர் செய்நூலில் அச்சொல்லே இல்லை!
பாதியிலே புகுந்திங்கே பரவியதித் தொல்லை
பகுத்தறிவுள் ளோன் சாதி பார்த்திடுவா னேடா?

சாதிகளின் பெயராலே சங்கங்கள் தோற்றிச்
சமைக்கின்றார் தனித்தனியே சட்டங்கள் இந்நாள்
வீதிகளில் இவ்வாறாய் வேற்றுமைவித் திட்டு
வேலிக்குள் தன்னலமே விளைத்தல்நன் றோடா?

இந்திய மொழிகளின் தொன்மைச் சுவடிகள்

லெனின்கிராடு நகரில் நேவா நதிக் கரையில் பழம் பெரும் மாளிகை யொன்று உள்ளது. இந்த மாளிகையிலிருக்கும் கீழைத்துறை ஆராய்ச்சி கழகத்தில் மிகவும் அரியதொன்மையான கையெழுத்துப் பிரதிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. ஓலைச் சுவடிகள், பிர்ச் மரப்பட்டைகள், நேர்த்தியான தோல் ஆகியவற்றின் மீது எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளைக் கண்ணுறும்போது இந்தியாவின் மகோன்னதமான கடந்த காலம் நம் மனத் திரையில் எழுகிறது. வெவ்வேறு விதமான எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கும் இந்த அரிய கையெழுத்துப் பிரதிகளில் கடந்த மூவாயிரம் வருட செழுமையான இந்திய கலாச்சார வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலக்கியம், விஞ்ஞானம், தத்துவ சாஸ்திரம், மதம் சம்பந்தமான விஷயங்களைக் காணலாம்.

எங்களுடைய நாட்டில் இந்திய கையெழுத்துப் பிரதிகள் ஆசியா பொருட்காட்சி சாலையினுல் 18-ம் நூற்ருண்டிலிருந்தே சேகரிக்கப்பட்டன.

யாத்திரிகர்கள், விஞ்ஞானிகள், தொல்பொருள் அன்பர்கள், அரிய கையெழுத்துப் பிரதிகளை சேகரிப்பவர்கள் முதலியோர் பொருட்காட்சி சாலைக்கு இந்த கையெழுத்துப் பிரதிகளை அளித்தனர்.

நடிகர் கெராசிம் லெபதேவ் இந்தியாவில் தங்கியிருந்தபோது சமஸ்கிருதத்திலும் இந்தியிலும் பழைய கையெழுத்துப் பிரதிகளையும் அநேக பழைய பஞ்சாங்கங்களையும் விலைக்கு வாங்கினுர். நேவாரி மொழியில எழுதப்பட்டிருக்கும் ஐந்து நேபாள கையெழுத்துப் பிரதிகள் பொருட்காட்சிசாலைக்கு அன்பளிப்பாகக் கிடைத்தன. தொன்மை, மத்திய கால இந்தியாவில் இருந்த பல்வேறு விஞ்ஞான விஷயங்களைப்பற்றிய அரிய தகவல்களை இவை வெளியிடுகின்றன. அஸ்திரகானிலிருந்த இந்திய வணிகரிடமிருந்து வாணிகம் பற்றிய பழைய நூல்கள் வாங்கப்பட்டன. 1912 ல் பஞ்சாபி மொழியில் 11 கையெழுத்துப் பிரதிகளையும், பழைய வர்த்தக நூலையும் ஒருவர் பொருட்காட்சிசாலைக்கு அன்பளிப்பாகத் தந்தார். இதற்கு ஓராண்டிற்குப் பின்னர் பாண்டிச்சேரியிலிருந்து தொன்மையான தமிழ் ஓலைச் சுவடிகளும் பொருட்காட்சிசாலைக்கு கொண்டு வரப்பட்டன. இவற்றில் மருத்துவ சாஸ்திரம் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. 1949ல் ஸ்ரீநகரிலிருந்து காஷ்மீரி கையெழுத்துப் பிரதி பொருட்காட்சிசாலைக்குக் கிடைத்தது. தற்சமயம் விலைமதிக்க வொண்ணுத அரிய 600 இந்திய கையெழுத்துப் பிரதிகள் பொருட்காட்சிசாலையில் உள்ளன.

பொருட் காட்சிசாலையில் தொன்மையான மகாபாரத சுவடிகளும், புராணக் கதைகளைப்பற்றிய ஏராளமான சுவடிகளும் இருக்கின்றன. 12-ம் நூற்ருண்டில வாழ்ந்த கவிஞர் சந்தபார்தாயி எழுதிய பிருத்விராஜ் ராசோ என்ற நூலும், புகழ்பெற்ற அறிஞர் பாணினி கி மு நான்காம நூற்ருண்டில் எழுதிய சமஸ்கிருத இலக்கணமும் பொருட் காட்சிசாலையில் இருக்கின்றன.

பிரபல இந்தியக் கவிஞர்களின் நூல்களும் இங்கே இருக்கின்றன. சுபாஷிதாராவ் (பழமொழிக் கருவூலம்) என்ற தொகை நூல் தனிச் சிறப்பு படைத்ததாகும். ஏனெனில் இதிலுள்ள பல பாடல்கள் வேறெங்கும் கிடைக்கவில்லை.

இந்திய தேவதைக் கதைகளும் பல இருக்கின்றன. ஹிதோபதேசம், பிரிஹத்கதாமஞ்சரி முதலிய சமஸ்கிருத நூல்களும், பாலி மொழியில் இலக்கண நூல்களும், அமர கோஷமும் சீக்கியர்களின் புனித நூலான ஆதிகிரந்தமும், புத்த மத நூல்கள் பலவும் பொருட் காட்சிசாலையில் இருக்கின்றன.

தத்துவ சாஸ்திர விஷயங்களைப் பற்றி புத்த பிட்சு நாகசேனுவுடன் மிலிந்தா உரையாடியதை விவரிக்கும் மிலிந்தபன்ஹா (மிலிந்தாவின் கேள்விகள்) என்ற சுவடி நூலும் பொருட் காட்சிசாலையில் இருக்கிறது. ஆதி புத்த மதத்தின் தத்துவ அடிப்படைகளை இந்த உரையாடல்கள் நன்கு விவரிக்கின்றன.

மகான் புத்தரின் வாழ்க்கையையும் போதனைகளையும் வர்ணிக்கும் லலிதவிஸ்தாரா என்ற நேபாள நூலும் இருக்கிறது. கி. மு. முதல் நூற்ருண்டுகளில் வட இந்தியாவில் புத்த மதத்தின் வளர்ச்சியை இது பிரதி பலிக்கிறது. அசோகாவதான மாலா என்ற நூல் புத்தமத வரலாற்றைச் சுவைபட எடுத்துக் கூறுகிறது. மௌரிய சக்கரவர்த்தி அசோகரைப்பற்றிய புத்த மதக் கட்டுக் கதைகளின் தொகுப்பாகும் இது.

கி. பி முதலாம் நூற்ருண்டைச் சேர்ந்த ஜம்பதி என்ற நூலின் பிர்ச் மரப்பட்டைக் கையெழுத்துப் பிரதியும், பாலி மொழியில் எழுதப்பட்ட கம்மவாச்ச என்ற ஓலைச் சுவடியும் பொருட் காட்சிசாலையிலிருக்கும் அரிய சேகரிப்புக்களாகும்.

தொன்மையான கையெழுத்துப் பிரதிகளைப் பார்ப்பதற்காக இந்தியாவிலிருந்து பல அறிஞர்கள் பொருட் காட்சிசாலைக்கு வந்துள்ளனர். சர்வ தேச இந்திய கலாச்சார கழகத்தின் தலைவர் டாக்டர் ரகுவீர், புத்த மதம் சம்பந்தமான திபேத்திய, மங்கோலிய, இந்திய மொழி கையெழுத்துச் சுவடிகளின் போட்டோ பிரதிகளை பொருட் காட்சிசாலையிலிருந்து பெற்றிருக்கிருர். சென்னைப் பல்கலைக் கழகப் பேராசியரும் புகழ்பெற்ற சமஸ்கிருத அறிஞருமான திரு ராகவனும் தொன்மை இந்திய இலக்கியத்தைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி வரும் கல்கத்தா பேராசிரியர் ஒருவரும், மேலும் பல இந்திய அறிஞர்களும் விஞ்ஞானிகளும் பொருட் காட்சிசாலைக்கு வருகை தந்து, பார்வையாளர் புத்தகத்தில் தம் கருத்துக்களை எழுதியிருக்கின்றனர்

இந்திய கலாச்சாரத் துறை அமைச்சர் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் சோவியத நாட்டிற்குவந்திருந்த போது, இந்த அரிய கலைப் பொக்கிஷங்களையும கண்டார். கையெழுத்துப் பிரதிகளைப் பேணிக் காத்து வரும் இலாக்காவின் தலைமை ஊழியரான எடுவர்டு தியோம்கின் எம். எஸ்சி. இந்திய அமைச்சருக்கு பொருட் காட்சிசாலையிலுள்ள அரிய சுவடிகளைப்பற்றி விளக்கிக் கூறினுர். இந்த இலாக்காவின் வேலையில் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் மிக்க அக்கறை காட்டினுர். அங்கு பணியாற்றும ஊழியர்களுடன் அளவளாவினுர். சோவியத யூனியனிலிருக்கும் இலங்கைத் தூதரும், பிரபல புத்த மத அறிஞருமான எம். மலாலசேகராவும் பொருட் காட்சிசாலைக்கு வருகை புரிந்திருக்கிருர்.

பொருட் காட்சிசாலையிலிருக்கும் அரிய சுவடிகளின் போட்டோ பிரதிகளை அனுப்பும்படி கேட்டு இந்தியாவிலிருக்கும் பல கல்லூரிகளிலிருந்தும் விஞ்ஞான நிறுவனங்களிலிருந்தும் அடிக்கடி கடிதங்கள் வருகின்றன.

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழைத் துறை ஆராய்ச்சிக் கழகத்தில் கிழக்கு நாடுகள் சம்பந்தமான அரிய சுவடிகள் மொத்தம் 40 000 உள்ளன. இவற்றில் இந்தியச் சுவடிகள் ஒரு பிரிவாகும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தஸ்தாவேஜுகளை இங்கே தொகுத்து, விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்துவெளியிடுகின்றனர். இந்தியாவின்பால் எங்கள் மக்கள் அதிக அக்கறை காட்டுவதற்கேற்ப, நம் கலாச்சார தொடர்புகள் பல்வேறு துறைகளிலும் வளர்ந்து பெருகுவதற்கேற்ப, விஞ்ஞானிகளின் இந்தத் தொகுப்பு வேலையும அதிகரிக்கிறது. வரலாற்று அறிஞர்களும், மொழி நூல வல்லுனர்களும், தொன்மொழி அறிஞர்களும், தத்துவ சாஸ்திரிகளும தங்கள் ஆராய்ச்சிகளில் இங்கே கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டுள்ளனா.

—சோவியத்நாடு

வெறிபிடித்த வடவரே!

தென்னகத்தின் எண்ணம் பாரீர்!

முட்டுக்கட்டைப் போடாதே!

இந்தி பேசாத மக்கள்மீது இந்தி திணிக்கப்படமாட்டாது என்று உறுதி மொழியளித்த ராஷ்டிரபதி மற்ருேர் விஷயத்தையும் தெரிவித்திருக்கிருர். இந்தி பேசும் மக்கள்மீது ஆங்கிலம் திணிக்கப்படக்கூடாது என்று ராஷ்டிரபதி கேட்டிருக்கிருர் நியாயமே. ஆனல், இந்தி பேசாத மக்களுக்களித்த உறுதிமொழியைச் செல்லாக்காசாக்கவும் முட்டுக்கட்டையைச் சிருஷ்டிக்கவும் ராஷ்டிரபதி இவ்வாறு கேட்டிருந்தால், நியாயமல்ல. பல ஆண்டுகளாக ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்து வந்திருக்கிறது. முக்கியமாக சுதந்திரம் கிடைத்ததிலிருந்து சென்ற பதின்மூன்று ஆண்டுகளாகவும் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்து வந்திருக்கிறது இதே நிலைமை நீடிப்பது ஆங்கிலத்தைத் திணிப்பதாகாது. இந்த நிலையே நீடிக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிருேம். ஆகவே இப்போது யார்மீதும் எதையும் நாங்கள் திணிக்க வேண்டியதில்லை.

இந்தி பேசாத மக்களுக்கு ஒரு புதிய மொழி ஆட்சிமொழியாகக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தி பேசும் மக்கள் பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில் அவர்களுடைய மொழிதானே ஆட்சி மொழியாகிறது.

ஆகவே இந்தி பேசாத மக்களுக்கு அளித்த உறுதிமொழியைச் செல்லாக்காசாக்கும் பொருட்டு, ராஷ்டிரபதி ஒரு புதிய கோரிக்கையைப் போட்டது நியாயமில்லை.

—இராசகோபாலாசாரியார்.

பொருந்தா விவாதம்

இந்திக்காக எதிர்பார்க்கப்படுவதும் கட்டாயப்படுத்துவதுமான அகில இந்திய முக்கியத்துவத்தைத் தங்களுடைய பிரதேச மொழியொன்றிற்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தாமல் இருக்கும்படியாகத் தென்னகத்தை டாக்டர் பிரசாத் கேட்டிருப்பாரேயானுல் அது விவாதத்திற்குப் பொருத்தமாக இருந்திருக்கும். பல்வேறு மொழிகள் உள்ள இந்த நாட்டில், எல்லா ராஜ்பங்களும் தங்களுக்குள் ஓர் தொடர்பு மொழியாகப் பயன் படுத்தக்கூடிய ஒரே பொதுமொழி-ஒரு நூற்ருண்டுக்கு மேலாகக் கல்வித் துறையிலும் அரசியல் அலுவலிலும் பயன்பட்டு வந்திருக்கிற ஆங்கில மொழி தான்.

—மெயில்.

செத்துப்போன கிளிக்குப் பஞ்சடைத்து வைக்கிருர்கள்.

அரசியல், சமூக, கலாசார, கல்வித்துறைகளில் நாட்டுக்கு அரும் பெரும் சேவை செய்துள்ளவர்களென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் பிரமுகர்களும் இந்தி ஆட்சிமொழியாவதை ஏற்கவில்லை. இவர்கள் தமிழ் நாட்டை மட்டும் சேர்ந்தவர்களல்ல. எல்லா ராஜ்யங்களையும் சேர்ந்தவர்கள் இதில் இருக்கிருர்கள். இந்தி மீதுள்ள வெறுப்பினுல் இவர்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. நாட்டின் நிர்வாகமும், முன்னேற்றமும் கேலிக்கூத்தாய் விடக்கூடாதென்பதில் உள்ள அக்கறைதான் இவர்களுடைய ஆட்சேபணைக்கு முக்கிய காரணமாகும். அந்தந்த ராஜ்யத்தில் அந்தந்தப் பிரதேச மொழிகள் இருக்கட்டுமென்று இவர்கள் சொல்கிருர்கள். ஆனல் அகில இந்திய தேவைகளுக்கு இப்போதிருப்பதைப் போலவே ஆங்கிலம் நீடிக்கட்டுமென்கிருர்கள். ஆங்கிலத்தின்மீதுள்ள மோகத்தால் அல்ல. எது அனுபவசாத்தியம் என்பதை அறிந்தே அவர்கள் பேசுகிருர்கள். இன்று இந்தி உள்ள நிலையில் அதற்கு ஆட்சிமொழியாகக்கூடிய தகுதி இல்லையென்பதை வடஇந்தியாவில்கூடப் பலர் ஒப்புக்கொள்ளுகிருர்கள். நாளடைவில்தான் அது வளர்ச்சி பெறமுடியும். ஆட்சிமொழிக் கமிஷனின் அறிக்கைகளோ, ராஷ்டிரபதியின் கட்டளைகளோ இந்தியை ஒரு முதல்தரமான ஆட்சிமொழியாக்கிவிட முடியாது. ஆகவே, காரியம்தான் இப்போது முக்கியம். சுதந்திர தினத்தன்று ராஷ்டிரபதி ராஜன்பாபு சென்னை கடற்கரை கூட்டத்தில் பேசுகையில் காரியம் நடக்கவேண்டியதுதான் முக்கியம் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிருர். அபிவிருத்தி பெறுவதற்கு இந்தியா மேல் நாட்டினரையே நம்பியிருக்கிறது. விஞ்ஞானம், கைத்தொழில நுட்பம் போன்றவைகளை ஆங்கில மொழியின் மூலமதான் கற்க வேண்டியிருக்கிறது. செத்துபபோன கிளிக்குப் பஞ்சடைத்து வைப்பதுபோல், ஆங்கிலக் கலைச்சொற்களுக்குஇந்தி அர்த்தங்களைக் கண்டுபிடிப்பதில் செலவிடும் நேரத்தையும், சக்தியையும் மூலத்தைக் கற்பதில செலவிட்டால் உண்மையாகவே நமக்கு உதவியாயிருக்கும் ஆங்கிலத்தை இந்தியாவின்மீது சுமத்துவதாக ராஜன் பாபு கருதுவது சரியாகாது. அதை யாரும் சுமத்தவில்லை. நமது கல்வியமைப்பு, நிர்வாகம், நீதி பரிபாலனம். ஆகிய யாவுமே ஏற்கனவே ஆங்கிலத்தில்தானிருக்கின்றன. புதிதாகச் சுமத்தப்படுவது இந்திதான்.

—தினமணி.

கேரளம் கேட்கிறது

இரா. இளஞ்சேரன்.

குடியரசுத் தலைவருக்குக் கருப்புக்கொடி காட்டப்படும். தி. மு. கழகத் தீர்மானம்.

—செய்தி.

திராவிட நாடு என்பது வெறும் கற்பனை. கேரளம், ஆந்திரம், கன்னடம், தமிழ்நாடு ஆகியவை சேர்ந்ததுதான் திராவிடநாடாம்! ஆனால் கேரளத்திலோ, கன்னடத்திலோ, ஆந்திரத்திலோ, இந்தப் பேச்சைப் பேசவே ஆள் இல்லை.

—காமராஜர்.

இரண்டு இதழ்கள்.

இவைகளோடு இரண்டு பத்திரிகைகளின் தலையங்கங்களையும் குறிப்பிட வேண்டும். ஒன்று தினமணி 2-8-60 இதழ் பிறிதொன்று மலையாள தினசரியான 'கேரள கௌமுதி'. கருப்புக் கொடி தீர்மானம்-அது பிறந்த சூழ்நிலை, கழகத்தின் லட்சியம் இவை குறித்து இரண்டு இதழ்களும் எழுதியுள்ளன. தினமணி வழக்கமான முறையில், தனக்கே உரித்தான பாணியில் காரசாரமாகக் கண்டித்து எழுதியிருக்கிறது. 'கௌமுதியின் தலையங்கத்தில் பளிச்சிடும் நீதியும் பண்பும்' இன்றைய அரசியல் சூழ்நிலையில் தி. மு. கழகத்தின் மகத்துவமும் 'தினமணி'யில் இல்லை. காரணம், அதன் பரம்பரைப் பாடத்தை அது ஒப்புவிக்கிறது.

தினமணியின் பிறப்பு வாசனை!

'பொறுமை, துவேஷம் வெறுப்பு என்ற சூழ்நிலையில் தோன்றிய இக்கட்சியினர் சட்ட சபை நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொள்ள ஆரம்பித்த பிறகு, பொறுப்புணர்ச்சியோடு செயல்படுவார்களென்றே எல்லோரும் எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் பிறவி வாசனையிலிருந்து அவர்கள் விடுபட முடியவில்லைபோல் தோன்றுகிறது.

இத்தகைய நடவடிக்கைகளால் அவர்கள் தமிழ்நாட்டுக்கு நன்மையைவிடக் கெடுதல்தான் அதிகம் செய்கிறார்கள்.''

இவை 'தினமணி'யின் திருவாசகங்கள் இன்னும் கிணற்றில் விழுவர்கள், விசித்திரப் பிறவிகள், வைத்தியக்காரத்தனம், இப்படி இயக்கத்தினரையும், இலட்சியத்தையும் 'வைராக்கிய புத்தியோடு' திட்டித் தீர்த்திருக்கிறது 'தினமணி.' அடிமை விசுவாசத்தை ரத்த அணுக்களாகக் கொண்டு பிழைத்துவரும் ஒரு தரங்கெட்ட தினசரியின் அத்தனை பண்புகளும் தினமணியிடம் உண்டு என்பதனை இன்று நேற்றல்ல, முன்னரே நாடு அறியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்பு எழுச்சி தென்னகத்தின் பிற பகுதிகளில் எத்தகைய எண்ண அலைகளை எழுப்பியிருக்கிறதென்பதை 'தினமணி' மட்டுமல்ல, காமராஜரும், அவர்தம் அடியார்களும் அறிந்துகொள்வது நல்லது. கேரளத்தின் பிரபலமான தினசரி கௌமுதி, 4-8-60 இதழில் அது எழுதுகிறது.

கௌமுதி கண்ட உண்மை.

''திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தத் தீர்மானம் மத்தியபீடத்து காங்கிரஸ் அரசியலாரையும், சென்னை அமைச்சரவையையும் அயர்வடையச் செய்திருக்கிறது. காங்கிரஸ் தலைவர்களின் வயிற்றில் ஒன்பதாம் திருவிழாவின்மேளசப்தம் கேட்கிறது.

குடியரசுத்தலைவருக்கு கருப்புக்கொடி காட்டும். தி. மு. கழகத்தின் தீர்மானத்தை தேசத்துரோகமாகவும், தி. மு. கழகத்தினரை ஐக்கியத்தின் விரோதிகளாகவும் சித்திரித்து காங்கிரசும் அதன் ஆதரவாளர்களும் பிரசாரம் செய்கிறார்கள்.

இவர்களுக்குத்தான் குத்தகையா?

இவைகளை வைத்துக்கொண்டு பார்த்தால் தேசபக்திக்கும், ஐக்கியத்திற்கும் காங்கிரசாரே பூரண 'குத்தகையாளர்கள்' என்றே எண்ணத் தோன்றும். தங்களுக்குப் பிடிக்காதவைகளைப் பிறர் சொன்னால் அவர்கள் சொல்வதெல்லாம் தேசத்துரோகமாகவும், செய்வதெல்லாம் ஒற்றுமையைக் குலைக்கும் செயலாகவும் கருதுவது காங்கிரஸ் இயக்கத்திற்கு இப்போது வழக்கமாகி விட்டது.''

அகிம்சை, அறவழி, நாட்டுப்பற்று, இவைகளின் பரம்பரையிலே வளர்ந்த காங்கிரசார் மட்டும்கருப்புக் கொடி காட்டலாம், பள்ளிக்கூடங்களுக்கு நெருப்பிடலாம். வண்டிகளைச் சேதப்படுத்தலாம். இவையெல்லாம் ஜனநாயகத்தின் மகத்தான மாதிரிகள்!

[இங்கு 'கௌமுதி' குறிப்பிடுவது காங்கிரசாரின் ஆகஸ்ட் புரட்சியை மட்டுமல்ல, பொதுவுடமை ஆட்சியைக் கவிழ்க்க, கேரளத்து காங்கிரசார் பிற்போக்கு கட்சிகளோடு சேர்ந்துகொண்டு புரிந்த திருவிளையாடல்களைத்தான் 'கௌமுதி' இப்படிச் சுட்டிக்காட்டுகிறது]

எது தேசத்துரோகம்?

''வடக்கத்தியரின் அகந்தைக்கும், கட்டளைக்கும் ஏற்ப ஆடும் ஒரு ஆட்சிபீடத்தின் ஜனநாயகத்திற்கே விரோதமான தீர்மானத்திற்கு எதிராக அந்த ஆட்சியின் தலைவரிடம் கண்டனங்களைத் தெரிவிப்பது எப்படி தேசத்துரோகமாகிவிடும்?''

கேரளத்திலிருந்துதான் இந்தக் குரல் கேட்கிறது. 'தினமணிக்கு'த்தான் சொன்னாலும் புரியாது; சுய புத்தியும் கிடையாது! சென்னை மாநில தேசீயபத்தாராவது உணர்ந்து கொள்ளட்டும் இதனை.

வடக்கத்தியரின் அகந்தைக்கும், கட்டளைக்கும் ஏற்ப ஆடும் ஆட்சிபீடம் என்று 'கௌமுதி' அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிடுவது எதைக் காட்டுகிறது?

தி. மு. கழகத்திற்கு மற்ற பகுதிகளில் பரவலான செல்வாக்கு இருக்கிறது என்பதைத்தானே!

தேசீயத்தாரின் அற்ப ஆறுதல்.

டில்லி ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் பேச வேண்டுமானால் கழகத்தின் மொழியில்தான் பேசவேண்டும். 'கௌமுதி'யின் விமர்சனம்இத்தோடு நின்றுவிடவில்லை. மேலும் குறிப்பிடுகிறது:

''தினம் தினம் வளர்ந்துவரும் திராவிட முன்னேற்ற கழகத்தாரின் வலிமையைச் சாமான்யமாகச் சித்தரித்துக் காட்ட, சென்னை சட்ட சபையில் அது ஒரு எதிர்கட்சிகூட அல்ல என்றும்பிற்போக்கு வாதிகளால் இயக்கம் எப்படியோ சென்னை நகரசபையைக்கைப்பற்றிவிட்டதென்றும் பொருளற்ற வாதங்களை எழுப்பி அற்ப ஆறுதல் பெறும் நிலையற்ற புத்திசாலிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள!''

சென்னை தேசீயத் திருமேனிகளின் போக்கை, நம்மைவிடத் தெள்ளத் தேளிய 'கௌமுதி' படம் பிடித்துக் காட்டுகிறது. 'கௌமுதி' சுகுமாரன் இன்னும் எழுதுகிறார்:

வெறி விலக்கும் இயக்கம் தி. மு. க.

''திராவிட முன்னேற்ற கழகத்தின் பல செயல் முறைகளோடு கருத்து வேற்றுமை கொண்டவர்கள்கூட அந்த இயக்கம் சாதி வெறியையும், வடக்கத்தி ஆதிக்கத்தையும் முழு வலிமையோடு எதிர்க்கும் ஒரு சுயமரியாதை இயக்கம் என்பதை ஒப்புக்கொள்வார்கள். பல துறைகளில் புறக்கணிக்கப்பட்ட தென்னிந்தியாவின் குரலைத்தான் அவர்கள் எதிரொலிக்கிறார்கள். தென்னகத்தினர் மீது இந்தியைத் திணிக்கும் முயற்சி வடக்கத்தி ஆதிக்கத்தை வலுப்படுத்தும் முயற்சியே தவிர, வேறல்ல.

1965-க்குப் பிறகும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும் எனும் பாராளுமன்றத்தின் அறிவிப்பு தென்னகத்தாரின், குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தாரின் வெற்றியையே காட்டுகிறது''

''என்றுமே புறக்கணிக்கப்பட்டு வரும் கேரளத்திற்கும் தி. மு. கழகத்தாரின் செயல் முறைகள் ஏற்றதேயாகும்.

பட்டம் தாணுவின் ஆவேசம்

இவை 'கௌமுதி'யின் நீண்ட தலையங்கத்தின் சில பகுதிகள் இந்த இதழ் வெளிவரும் முன்னரே பட்டம் தாணு மத்திய பீடத்தின் ஆதிக்கத்தை வன்மையாக கண்டித்துப் பேசினார் எல்லை மீறிப் போகும் டில்லியின் புறக்கணிப்பை இன்னும் சகித்துக்கொண்டிருப்பது நாட்டிற்கும் நமக்கும் நல்லதல்ல. நமது உரிமைகளை நாம் எண்ணி, எண்ணி, ஒவ்வொன்றாகப் பெற வேண்டும். இப்படிப் பேசிய முதலமைச்சர் பட்டம்தாணு எல்லா கட்சியினரையும் தமக்கு ஒத்துழைக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு மறுநாள் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட கேரள காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் ஏ. டி. தேவஸி பெருத்த ஆரவாரத்தினிடையே கீழ் வருமாறு பேசினார்.

''கப்பல் கட்டும் நிலையமும், எண்ணெய் சுத்தி செய்யும் தொழிற்சாலையும் கேரளத்தில் நிறுவ டில்லி மறுத்தால், அமைச்சர்களான பட்டம் தாணு, பி. டி. சாக்கோ, சங்கர் ஆகியோர் தங்களதுகண்டனத்தைத் தெரிவிக்க பதவிகளை ராஜினாமா செய்வார்கள்''

வடக்கு வஞ்சிக்கிறது!
இது உண்மை!

மேலும் தேவஸி பேசும்போது, இதனை மத்திய அரசியலாருக்கு அமைச்சர்கள் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த எண்ணங்களும், இதனால் ஏற்படும் விளைவுகளும் எதைக் காட்டுகின்றன? தெற்கு தேய்கிறது-வடக்கு வஞ்சித்து வாழ்கிறது என்பதைத்தானே! கேரளத்து அமைச்சர்கள், அவர்கள் இரு வேறு கட்சியினராயிருந்தாலும், உண்மையைப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம் மதியூக மந்திரிப் பிரதானியரும், அவர் தம் தந்திரத் தலைவர்களும் அப்படி ஒரு ஆதிக்கமே இல்லை என்று சாதிக்கிறார்களே! இதற்குப் பதவி நாற்காலிகள் பறி போய்விடும் என்ற அவர்கள் அச்சத்தைத் தவிர, வேறு எதைத்தான் காரணமாகக் காட்டமுடியும்? 'கழகத்தார் நாட்டுப் பற்று இல்லாதவர்கள்' என்ற பழசாகிப் போன கூச்சலைத்தான் அவர்கள் கூடாரம் திரும்பத் திரும்ப எதிரொலிக்கிறதே தவிர, வேறு எந்தவித உருப்படியான பதிலையும் காணோம்!

கிளிப்பிள்ளைகள்!
செக்குமாடுகள்!

சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளைப் புத்தி புற்றெடுத்துப் போன செக்குமாட்டுச் சிந்தை-நாட்டுவளப்பம் அறியாக் கிணற்றுத் தவளைப் போக்கு இவைகளை வைத்துக்கொண்டு தென்னகத்து தேசீயத்தார் திருவிழா நடத்துகிறார்கள்! இந்த லட்சணத்தில் வடக்கத்தி எஜமானர்கள் சில பல வேளை வந்து 'அருமையாக நடக்கும் ராஜாங்கம்' என்று இவர்களது அடிமை மனப்பான்மையைத் தட்டிக் கொடுத்து விட்டுப் போகிறார்கள்! இளிச்சவாயர்களும், ஏமாந்தவர்களும் வாழும் வரை இவர்களது ராஜாங்கம் நடக்கும். பிறகு எதைச் சொல்லிப் பாமரரை ஏமாற்றுவார்கள்? கேரளத்து அமைச்சர்கள் போல, துணிச்சலாகக்கூட அல்ல. அப்படி ஒரு ஜாடை காட்டக்கூட இவர்கள் அஞ்சி நடுங்குகிறார்களே!

'திராவிட நாடு பிரச்னைக்கு மற்ற பகுதிகளில் ஆதரவு இல்லை, என்று எப்போதும் போல சத்தமிடத் தெரியுமே தவிர, இருக்கும் ஆதரவினை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அப்படியே புரிந்து கொண்டாலும் புரியாதது போல பூசி மெழுகி விடுகிறார்கள்!

அச்சுதமேனோன் அறிவுரை.

கழகத்தின் தீர்மானம் நாடெங்கும் புயலைக் கிளப்பி விட்டபின் பொதுவுடமை அரசாங்கத்தின் முன்னாள் நிதி அமைச்சரான அச்சுத மேனோன் கேரள சட்ட சபையில் வஞ்சிக்கும் வடக்கு பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

'கேரளத்தவர்கள் உதைக்கும் காலுக்கு முத்தமிடுவோரல்ல. பிறர் வேண்டுமானால் இதனைப் பிரதேச மனப்பான்மை என்று சொல்லட்டும். நாம் பொருட் படுத்த வேண்டியதில்லை. நமக்குக் கிடைக்க வேண்டியவைகளுக்காக நாம் போரடத்தான் வேண்டும். மத்திய அரசியலாரின் இந்தப் புறக்கணிக்கும்மனப்பான்மைதான் தென்னிந்தியாவிலே திராவிட முன்றேற்ற கழகத்தை வளர வைத்திருக்கிறது'!

இது அச்சுத மேனோனின் சொற்பொழிவின் சின்னஞ்சிறு பகுதி. பேசிய இடம் பொதுக்கூட்டமோ, தெருவோரமோ அல்ல! மக்கள் பிரதிநிதிகள் நிறைந்த சட்டசபையில் பேசினார். அவருக்குப் பின் பேசிய அத்தனை உறுப்பினர்களும், மிக மிக ஆவேசமாகப் பேசினார்கள். சட்ட சபை நடவடிக்கைகள் அன்று கட்டுப்பாடாக, உணர்ச்சி மயமாக நடந்ததாகப் பத்திரிகைகள் எழுதின.

காமராசர் கண்திறந்து காண்பாரா?

இவை அத்தனையும் தி, மு கழகத்தின் ஒரே ஒரு தீர்மானத்தால் விளைந்த நிகழ்ச்சிகள் என்பதற்காக நாம் பெருமைப் படலாம். அதே வேளையில் 'எதிர்ப்பிலே வளர்ந்த ஒரு மாபெரும் இயக்கத்தை' பழிபேசியே தொலைத்திட முயலும் காமராசரும் அவர்தம் அடியார்களும் என்னதான் உண்மைநிலை எடுத்துரைத்த போதும் ஏற்றுக் கொள்வதில்லை. எதைத்தான் இவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்?

ஆதிக்கம் செலுத்துவோனும், அவனுக்கு அடிவருடுவோரும் மக்கள் சக்தியை வென்று ஆண்டதாக வரலாறே இல்லை.

ஒன்றுமட்டும் நமக்குஉறுதியாகப் படுகிறது. நேர்மையான, அறநெறி சார்ந்த பாதையிலே நாம் செல்கிறோம்.

கேள்விக்குறி போடும் கேரளம் இதைத்தான் தெளிவாக்குகிறது

கேரளம் கேட்கிறதா, என்று இனியும் காமராசர் கேட்டால், அவருக்காக நாம் அனுதாபப் படுவோம் ★

வெண்பாப் போட்டி

நீர்மேல் எழுந்த நெருப்பு!

பண்ணூர்ந்த செந்தமிழின் பாகுமொழிப் பாவையவள்
தண்ணூர்ந்த மெல்லியலே தானெனினும்-விண்ணூர்ந்த
சூர்கதிர்போல் சுட்டதுவே என்பிரிவு கேட்டவள்கண்
ணீர்மேல் எழுந்த நெருப்பு !

நாஞ்சில் ஆ. ஆரிது.

❁

தேரா அரசை,யவன் தேவியை, மாநகரை
நீரா யவித்த நெருப்பெதுசொல் ?-வீராகேள் !
கூர்வேலாய்க் கூற்றுய்க் கொதித்தெழுந்த கண்ணகிகண்
ணீர்மேல் எழுந்த நெருப்பு !

சொ சண்முகம், மேலைச்சிவபுரி.

❁

தருக்கர் செருக்கடக்கும் தன்மானம் காக்கும்
நெருக்கும் கொடுங்கோல் நிமிர்க்கும்-உருக்குலைந்து
பார்மேல் மிகுதுன்பம் பட்டுழன்ற ஏழையர்கண்
ணீர்மேல் எழுந்த நெருப்பு.

பனை. சண்முகம், நெற்குப்பை.

❁

வண்டூத வாய்விள்ளும், மண்டுகம் போய்மறையும் ;
தண்டாதில் தேன்துளிகள் தத்தளிக்கும் ;-வெண்முத்து
நீர்மேல் தெறித்துவிழும் நின்வரவால் தாமரைதான்
நீர்மேல் எழுந்த நெருப்பு !

காட்டுலிங்கன், அரங்கனுதபுரம்.

❁

கடல்காட்டும் காலைக் கதிரோன், குளத்தில்
உடல்காட்டும் தாமரை, உள்ளக்-கடல்மாட்டு
காரிகை மேற்கொண்ட காமம் இவையன்றே
நீர்மேல் எழுந்த நெருப்பு.

அர. மணிவாசகன், பொள்ளாச்சி.

செந்தா மரையாழித் தேன்கமல மொட்டுக்கள்
நந்தா எழில்கொழிக்க நங்காய் பார்-சிந்தைகவர்
கூர்வேல் முனையன்ன கூம்பவிழா மொட்டனைத்தும்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

நடனமணி, சென்னை-12.

❁

இருள்வான் அடியில் இழைந்ததுசெவ் வண்ணம்,
திரள்மீன் ஒளிவான்!-மருள்வேனிஞ் சிக்கப்
பார்மேல் அலையின் பரிதிதான் நின்றணையா
நீர்மேல் எழுந்த நெருப்பு.

கே. பக்தவத்சலம், சென்னை-1.

❁

அந்திப் பொழுதில் அரக்காம்பல் நீர்மலர
சிந்தித்தே ஒருவமை செப்பென்றேன்-சிந்தாத
கார்போல் குழலுடையாள் காட்டினுள் சீருவமை
நீர்மேல் எழுந்த நெருப்பு.

சி. தனலன், தச்சம்பத்து

❁

"புணர்ச்சி பழகிப் புணராத் தமிழர்க்
குணர்ச்சிதந்தே ஒன்றுய்த் திரட்டினீர்;-தண்டமிழ்ப்
போர்க்கொடி யேந்திப் புறப்பட்டீர்; சம்பத்தே !
நீர்,மேல் எழுந்த நெருப்பு."

கு. மாவண்ணல், குடியேற்றம்.

❁

பண்ணிசைத்து வண்டுகள் பாடும் குளத்திலே
தண்ணீரில் தாமரை தண்டுடன் ஆடலும்
நீர்மேல் செங்குவளை நிற்றலு மொக்குமே
நீர்மேல் எழுந்த நெருப்பு.

ரெ. தமிழ்மணி கரடிகுளம்.

❁

மண்டைக் கனம்பிடித்த மன்னுதி மன்னரெலாம்
ஒண்டஇட மின்றியே ஓடினர்-மந்திரிகாள்
யார்நிலைத் தாரெண்ணிப் பார்த்திடுவீர் வெல்லுமோ
நீர்மேல் எழுந்த நெருப்பு.

கோ. புகழேந்தி.

சிந்தைக் குணர்வூட்டித் தென்பைத் தருகின்ற
செந்தா மரைப்பூவாள் செங்கதிரோன்-வந்தக்கால்
சீர்பொய்கை நின்று சிரிக்கின்ற தோற்றம்பார்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

செல்வக்கிழான், சென்னை-1.

❁

"மார்பின் விழுப்புண்ணும் பார்போற்றும் நற்புகழும்
நேர்முறை கெட்டதனல் நேர்ந்ததும்;-தீர்ப்பதனல்
தார்மன்னன் மாமதுரை பற்றியும் கண்ணகிகண்
நீர்மேல் எழுந்த நெருப்பு."

வி. இராமலிங்கம், திருமுதுகுன்றம்.

❁

கள்ளர்க்கும் பொல்லாக் கயவர்க்கும் தீமனமே
உள்ளர்க்கும் வேலை யொழிந்திடவே-மெள்ள மெள்ளப்
பார்விளக்க வந்த பரிதிபார் பைங்கடலின்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

எஸ். கணபதி சிதம்பரம்.

முல்லை

ஆசிரியர்
கண்ணதாசன்
விலை 25 காசு

புது வடிவில்
புத்தக உருவில்

சிறக்க வருகிறது செப்டம்பர் இதழ்.

- ஆசிரியர் கண்ணதாசன் எழுதும் புத்தம் புதிய கவிதை.
- நாரா நாச்சியப்பன் எழுதும் உணர்ச்சி கனைத் தூண்டும் ஒரு சிறுகதை.
- காசிப்பட்டணத்து நிர்வாண யோகி யொருவரின் கதை—பெயர்பெற்ற பிரஞ்சுப் பேரறிஞர் வால்டேர் எழுதிய கிண்டலும் நகைச்சுவையும் கலந்த கதை இது !
- வட்ட வடு—விருதைவாணன் எழுதும் சுவையும் விறுவிறுப்பும் நிறைந்த நீளக் கதை.
- சொந்த நாட்டுக்கு வந்திடாதே?-சௌமிய மாதவன் எழுதும் நெஞ்சை யுருக்கும் கவிதை.
- விலங்கொடிப்போம்—புலவர் தொல்காப்பியன் எழுதிய அனற்பொறி பறக்கும் கவிதை.
- இந்தியாவைக் கண்டு பிடிக்கக் கிளம்பிய கிரிஸ்டாபர் கொலம்பஸ் தன் இலட்சியத்தில் கண்டது வெற்றியா தோல்வியா ?—ஆராய்ச்சிக் கட்டுரை.
- வெள்ளைக் கண்ணுடி எழுதும் வேடிக்கைக் கதை.

பல சிறப்புப் பகுதிகள் !

நகைச் சுவைத் துணுக்குகள் !

மூன்று நிற அட்டை.

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு
விற்பனையாளர்கள் தேவை.

முல்லை சென்னை-6.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.